வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 04 17.10.2023 செவ்வாய்க்கிழமை இதழ் : 312 பக்கங்கள் : 12




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


# இஸ்ரேல்-ஹமாஸ் மோதலால் இலங்கைக்கும் பெரும் சவால்

## சுட்டிக்காட்டுகிறார் மனுஷ நாணயக்கார



கொழும்பு, ஒக்ரோபர் 17

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் குழுவினருக்கிடையில் இடம்பெற்றுவரும் மோதல் நிலையில் அரசாங்கம் எந்த பக்கமும் சாராமல் மோதலை எப்படியாவது சமாதானப் படுத்த வேண்டும் என்ற கோரிக்கையையே உலக நாடு களுக்கு விடுத்து வருகிறோம். ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க இது தொடர்பாக உலக நாடுகளுக்கு அறி விப்பு செய்திருக்கிறார். ஏனெனில், மோதல்களால் உலக பொருளாதாரம் நிச்சயமற்ற நிலைக்கு தள்ளப்படும் அபாயம் இருக்கிறது என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

11

## ஜே.வி.பி. தீவிரவாத அமைப்பு!

### கூறுகிறார் மகிந்தானந்த எம். பி.



கொழும்பு, ஒக். 17

விடுதலை புலிகளுக்கு அடுத்தபடியாக நாட்டில் உருவெடுத்த இரண்டாவது தீவிரவாத அமைப்பே மக்கள் விடுதலை முன்னணியென சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

11

## ஜனாதிபதித் தேர்தல் 2024 நிச்சயம் நடக்கும்

### மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டம்



கொழும்பு, ஒக். 17

அரசியலமைப்பின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் இடம்பெறும்.எனது தலைமைத்துவத்தில் பொதுஜன பெரமுன தேசிய தேர்தல்களில் போட்டியிடும். தேர்தலில்

11

## தனது ஜனாதிபதி வேட்பாளரை நவம்பரில் அறிவிக்கும் மொட்டு



கொழும்பு, ஒக். 17

பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் எதிர்வரும் நவம்பர் மாதம் பெயரிடப்படுவார் என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சியின் மாநாடு நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. எனவே, இக்கூட்டத்துக்கு முன்னதாக வேட்பாளர் தீர்மானிக்கப்பட்டு, கூட்டத்தின்போது அறிவிக்கப்படலாம் எனவும் அவர் கூறினார்.

” நாட்டில் ஏற்பட்டிருந்த ஸ்திரமற்றதன்மையை ஸ்திரப்படுத்தவே ஜனாதிபதிக்கு (ரணில்) ஆதரவு வழங்கினோம். மாறாக அடுத்த ஜனாதிபதி தேர்தலிலும் அவருக்கு ஆதரவு என்ற இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை. மொட்டு கட்சியின் சார்பிலேயே வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவார்.” - எனவும் ரஞ்சித் பண்டார கூறினார். (அ)

## பிரான்ஸ் செல்ல முயன்ற குடும்பஸ்தர் பெலாரஸ் எல்லையில் சடலமாக மீட்பு!

### வட்டக்கச்சி மாயவனூர் பகுதியை சேர்ந்தவர்

கொழும்பு, ஒக். 17

பிரான்ஸுக்கு செல்வதற்கு சட்டவிரோத முகவர் ஒருவரை நம்பி சென்ற கிளிநொச்சி-வட்டக்கச்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் பெலாரஸ் நாட்டின் எல்லையில் சடலமாக மீட்கப்பட்டாரென அவர்களது உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி - வட்டக்கச்சி - மாயவனூர் பகுதியைச் சேர்ந்த பாலசிங்கம் யுகதீபன் (வயது-40) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக அந்நாட்டு பொலிஸாரால் மீட்கப்பட்டார் எனக் கூறப்படுகிறது.

பிரான்ஸ் நாட்டுக்கு செல்வதற்கு சட்டவிரோத முகவர் ஒருவரை நம்பி விமானம் மூலம் ரஷ்யா சென்று அங்கிருந்து பெலாரஸ், போலந்து, ஜேர்மன் ஊடாக பிரான்ஸ் செல்வதற்காக பெலாரஸ்-போலந்து எல்லையை நடந்து கடப்பதற்காக ஏழு பேர் கொண்ட குழுவுடன் சென்றபோது உடல் நிலை பாதிக்கப்பட்டு பெலாரஸ் எல்லையில் அவர் சடலமாக மீட்கப்பட்டார் என தெரிவிக்கப்படுகிறது.



ஏனையவர்கள் இவரை விட்டுவிட்டுச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 7 ஆம் திகதி சனிக் கிழமை பெலராஸ் எல்லையில் இருந்து சில கிலோ மீற்றர்கள் தொலைவில் உடல் நிலை

11

## நண்பிகள் இருவர் ஒன்றாக சேர்ந்து தவறான முடிவு

கிளிநொச்சி, ஒக். 17

எங்களது சாவுக்கு யாரும் காரணமல்ல, இது நாங்கள் எடுத்த முடிவு எங்களுக்கு வாழவே பிடிக்கவில்லை”, என கடிதம் ஒன்றை எழுதி வைத்துவிட்டு இரண்டு

சிறுமிகளும் தூக்கிட்டு உயிர் மாய்த்தனர்.

நேற்று பிற்பகல் இரண்டு மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுரேஷ்குமார் தணிகை (வயது-17), லோகேஸ்வரன் தமிழினி (வயது-17) ஆகிய இரண்டு சிறுமிகளுமே லோகேஸ்வரன் தமிழினியின்

11

## தேர்தலைப் பிற்போடும் அரசின் சதித்திட்டத்தை தோற்கடிப்போம்

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஒக். 17

வங்குரோத்தடைந்துள்ள நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்க வேண்டிய இந்த நேரத்தில் புதிய தேர்தல் முறை குறித்த சமூக உரையாடலை உருவாக்கி, தேசத்தைக் கட்டியெழுப்புவது குறித்த பேச்சை பின்தள்ளும் நோக்கில் அரசாங்கம் செயல்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில், நாட்டின் பொருளாதாரத்தை உரிய

11

## நிகழ்நிலை காப்பு சட்டத்துக்கு எதிராக பேராயர் உயர்நீதிமன்றில் மனு தாக்கல்

கொழும்பு, ஒக். 17

அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்பிற்கு முரணாக உள்ளதாக வலியுறுத்தி பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் உயர்நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

மனுவில் பிரதிவாதியாக சட்டமா அதிபர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

இதேவேளை, சமூக ஆர்வலரும் சுயாதீன ஊடகவியலாளருமான தரிந்து உடுவரகெதர, இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர்கள் சங்கம், ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி உட்பட பல கட்சிகளும், சிவில் அமைப்புகளும் நிகழ்நிலை காப்புச் சட்டத்திற்கு எதிராக உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்துள்ளன.

நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தின் விதிகள் பேச்சு மற்றும் கருத்து

11

## இப்படியும் நடக்கிறது

தந்தை செல்வா என்று அறியப்பட்ட தமிழரசின் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் இறப்பதற்கு சில நாட்க ளுக்கு முன்னர் ஒரு பொது மேடையில் பேசும்போது ஒரு விடயத்தைச் சொன்னார்.

'தமிழ் மக்களுடைய பிரச் னைகளுக்கு என்னுடைய காலத் தில் தீர்வு கிடைக்கும் என்று நம்பினேன். அது கிடைக்க வில்லை. ஆனால், நமது பிரச் னைகளை பிரச்னையாக அடுத்த சந்ததியிடம் கொடுத்துவிட்டு செல்வேன். தம்பி அமிர்தலிங்கம் தனது காலத்தில் இந்தப் பிரச்னைகளுக்கு தீர்வுகாணுவார் என்று நம்புகின்றேன். அப்படி அவர் காலத்தில் கிடைக்காவிட் டாலும் நமது பிரச்னைகளை பிரச்னைகளாக அடுத்த சந்ததி யிடம் கொடுத்துவிட்டு அமிர் போவார். அப்படி பிரச்னை களை பிரச்னைகளாகவாவது நாம் விட்டுச் செல்லாவிட்டால் இந்த நாட்டில் தமிழர் என்ற ஓர் இனம் இருந்ததற்கான அடையா ளமே இல்லாமல் போய்விடும்' என்று.

இதை செல்வாதான் சொன் னாரா அல்லது அமிர்தலிங்கமே சொன்னாரா என்பது அமிருக்கு மாத்திரமே தெரிந்த சங்கதி. அந்தக் காலத்தில் அவர் பேசுவது வெளியே கேட்காது. அதனால் அவர் என்ன சொல்லுகிறார் என்பதை கேட்டு அமிர்தலிங் கமே மேடையில் அறிவிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அதனால்தான் அப்படிச் சொன் னேன். ஆனால், செல்வா கூறிய தைத்தான் அவர் கூறியிருப்பார் என்று அனைவருமே நம்பினார்கள். ஏனெனில், அவர் நினைப்பதைதான் இவரும் நினைத்தார்.

இதுவல்ல இன்று நாம் சொல்ல வருவது, அதாவது நமது பிரச்னைகளை பிரச் னையாக மாத்திரமன்றி, எமது போராட்டங்கள் பற்றிய வரலாற்றையும் நாம் நமது அடுத்த சந்ததிக்கு கடத்திச் சென்றுகொண்டே இருக்க வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது.

நேற்றும் இந்தப் பத்தியில் அவுஸ்திரேலிய நண்பர் ஒருவர் பதின்மூன்று பற்றி இன்றைய சந்ததியினருக்கு என்னவென்று தெரியவில்லை என்று ஆதங்கப் பட்டது பற்றி எழுதியிருந்தேன். அதுபோலத்தான் நமது போராட்டம் பற்றிய வரலாறு களையும் அதனால் தமிழ் மக்கள் பட்ட துயரங்களையும் துன்பங்க ளையும் தொடர்ந்து அடுத்த சந்ததியினரிடம் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டும்.

பிரபல இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் எதிர்வரும் 21, 22ஆம் திகதி களில் யாழ்பாணத்தில் நடாத்தவுள்ள இசை நிகழ்வை வேறு ஒரு நாளில் நடத்துமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இசை நிகழ்ச்சி நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டுள்ள அந்த தினங்களில், 1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணி யாற்றிக்கொண்டிருந்த வைத்தியர்கள், தாதியர்கள், உட்பட நோயாளர்கள், பொதுமக்கள் இந்திய அமைதிப் படையினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந் தனர்.

இந்த துயர்மிகுந்த நாட்களில் நினைவேந்தல்களூடாக அடுத்த சந்ததியினருக்கு தமிழின போராட்டத்தின் நியாயங்கள் சென்றடையும் என்று தாங்கள் நம்புவதாகவும், இந்நினை வேந்தல் நாட்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி இசை நிகழ்ச்சிகளில் தெரிந்தோ, தெரியாமலோ கலந்து கொள்வதானது அநியாயமாக படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் உறவுகளை அவமதிக்கும் செயல்பாடு என்பதுடன், பேரினவாதத்தால் இன்றும் நடைபெற்று வரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு துணைநிற்கும் செயல்பாடாகவும் அமைந்து விடும் என்றும் சந்தோஷ் நாராயணனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் முன்னணி தெரிவிக்கிருக்கின்றது.

நியாயமான கோரிக்கைதான். ஆனால், யுத்தம் முடிந்து இந்த பதினான்கு வருடங்களில் யாழ். போதனா வைத்தியசாலையில் மாத்திரம் இந்த நினைவு நாள் ஒரு சிலருடன் வருடாவருடம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அவ்வாறு அனுஷ்டிக்கப்பட்ட போது எந்த ஒருநாளிலும் முன்னணியினர் அதில் கலந்து கொண்டதாக நாம் அறிய வில்லை.

நினைவேந்தல் ஊடாக அடுத்த சந்ததியினருக்கு தமிழின போராட்டத்தின் நியாயங்கள் சென்றடையவேண்டும் என்ப தில் அக்கறையுள்ள இவர்கள், ஏன் இதுவரை அந்த நினைவுநா ளில் கலந்துகொண்டு, அதனை அடுத்த சந்ததியினருக்கு கொண்டு போய்ச் சேர்க்க முயலவில்லை என்று கேட்காமல் இருக்கமுடிய வில்லை. ஒருவேளை இப்படி அதனை ஒத்திவைக்க கேட்பதன் மூலம் இதனை கொண்டுபோய்ச் சேர்க்க முயலுகிறார்களோ தெரியவில்லை.

இதைவிட, அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்ற இளையவர் களுக்கு அந்த நிகழ்ச்சியிலேயே அந்த சம்பவத்தை நினைவுகூர்ந்து அந்தச் சம்பவத்தில் மரணித்த வர்களுக்கு சில நிமிடங்கள் அஞ்சலி செலுத்தியிருந்தால், அது இன்னும் தீவிரமாக இளையவர்களின் நெஞ்சங்களில் பாய்ந்திருக்கும்.

'ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரோ கண்ணா...' பாடல்தான் ஞாபகத்துக்கு வருகின்றது.!

-ஊர்க்குருவி.

# ஜனாதிபதியின் தீர்மானத்தை வரவேற்கும் மட்டக்களப்பு கால்நடை பண்ணையாளர்கள்!

மட்டக்களப்பு, ஒக். 17

மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை பிரச்னை தொடர்பில் ஜனாதிபதி மேற்கொண்டுள்ள தீர்மானத்தை வரவேற்பதாக மட்டக்களப்பு மாவட்ட கால்நடை பண்ணையா ளர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை பகுதி மேய்ச்சல் தரை பிரச்னை குறித்து உயர்மட்ட கலந்துரையா டலை நடத்தியிருந்தார்.

இதன்போது, மேய்ச்சல் தரையினை ஆக்கிரமித்துள்ள வர்களை ஒரு வாரத்திற்குள் அங்கிருந்து வெளியேறவும், கால்நடை பண்ணையா ளர்கள் அச்சமின்றி தமது கால்நடைகளை கொண்டு செல்வதற்கான சூழ்நிலை யினை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெ டுக்கவும் பணிப்புரைகளை விடுத்திருந்தார்.

இந்நிலையில், மட்டக களப்பு சித்தாண்டி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்கள் தமது சுழற்சிமுறையிலான போராட்டத்தினை 32ஆவது நாளாக நேற்றும், முன்னெ டுத்தனர்.

ஜனாதிபதியின் குறித்த தீர்மானத்தை வரவேற்கும் அதேவேளை, இந்த பிரச்னை தொடர்பில், முன்வைக்கப் பட்டுள்ள தீர்வு நடைமுறைப் படுத்தப்படும் வரையில் தமது போராட்டம் தொட ரும் என மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர் சங்கத் தலைவர் எஸ். நிமலன் தெரிவித்தார். (அ)

## போதைப்பொருள் மன்னாரில் மீட்பு



மன்னார், ஒக். 17

தலைமன்னார் உறுமலை கடற்கரையில் டிங்கி படகு ஒன்றில் சுமார் 10 கோடி ரூபா பெறுமதியான ஐஸ், ஹெரோயின் மற்றும் ஹாஷிஸ் போதைப்பொருள் நேற்றுக் காலை கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருளில் 4 கிலோ ஐஸ் போதைப்பொருள், 1 கிலோ 34 கிராம் ஹெரோயின் மற்றும் 5 கிலோ 254 கிராம் ஹஷிஸ் போதைப்பொருள் இருந்ததாக கடற்படை தெரிவித்துள்ளது.

கடற்கரையில் சந்தேகத்திற்கிடமான டிங்கி படகு ஒன்றை சோதனை செய்த போது போதைப்பொருள் பதுக்கிவைக்கப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

இவை டிங்கி படகில் 10 பார்சல்களில் அடைக்கப்பட்டிருந்ததாக கடற்படை தெரி வித்துள்ளது. (அ)

## 15 இந்திய மீனவர்களுக்கும் விளக்க மறியல்



மன்னார், ஒக். 17

தலைமன்னார் கடற்பரப்பில் கடந்த சனிக்கிழமை கைதான 15 இந்திய மீன வர்களும் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மன்னார் நீதவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத் தப்பட்டனர். இதன்போது, அவர் களை எதிர்வரும் 26ஆம் திகதி வரை யில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இலங்கை கடற்பரப்பில் சட்டவி ரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த நிலையில், கடந்த சனிக்கிழமை 15 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட் டிருந்தனர்.

அத்துடன், அவர்களது 2 படகுக ளும் கடற்படையால் கையகப்படுத்தப் பட்டன. கைதான மீனர்வகள் இராம நாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த வர்கள் என விசாரணையில் தெரிய வந்துள்ளது. (அ)

# அம்பாந்தோட்டை முதலீட்டு வலயத்தில் விரைவில் முதலீடு

கொழும்பு, ஒக். 17

அம்பாந்தோட்டையில் இலங்கை அரசாங்கம் வாக்குறுதியளித்த முதலீட்டு வலயம் தொடர்பான பேச்சுகளை மீண்டும் சீனா ஆரம்பித்துள்ளதாக முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

"சீன நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அம்பாந்தோட்டை துறைமு கத்திற்கு அடுத்துள்ள தொழில்துறை வலயத்தில் 15,000 ஏக்கர் நிலத்தை இலங்கை அரசாங்கம் சீனாவுக்கு வழங்குவதாக உறுதியளித்துள்ளது.

1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் அம் பாந்தோட்டை துறைமுகம் மற்றும் விமான நிலையத்தை சீனா நிர்மாணித்துள்ளது.

இந்த பொருளாதார வலயத்தில் சீனா முதல் ஐந்து ஆண்டுகளில் 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்து 100,000 வேலைகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்ப டுகிறது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் கள் மற்றும் கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவை முதலீட்டு வலயத் தில் முதலீடுகள் மேற்கொள் வதை மெதுவாக்கியிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தலைமையிலான அம்பாந்தோட்டையில் துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்கு வழங்கியதுடன், 15,000 ஏக்கர் பொருளாதார வலயத்தையும் உருவாக்க அனுமதி அளிக்கப்பட்டது.

10,000 ஏக்கரை அம்பாந் தோட்டை மாவட்டத்திலும் மொனராகலை மாவட்டத் தில் 5,000 ஏக்கரும் பொரு ளாதார வலயத்தை உருவாக்க வழங்கப்பட்டுள்ளது.

என்றாலும், இந்த பொரு ளாதார வலயத்துக்கான கலந்துரையாடல்கள் இன்ன மும் இறுதிப்படுத்தப்ப டவில்லை. கலந்துரையா டல்கள் வெற்றியடையும் பட்சத்தில் புதிய வலயம் எங்கு அமைக்கப்படும் என்பதை நாம் தீர்மானிக்க முடியும்"- எனவும் திலும் அமுனுகம தெரிவித்தார். (அ)

ஈழநாடு
Eelanadu
17.10.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 29

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# அமெரிக்க கரிசனையின் எல்லை எது?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைக்கால போக்குகள் தொடர்பில் – அமெரிக்கா கரிசனை கொண்டிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் ஏம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். இலங்கைக்கு வருகை தந்த, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணைச் செயலர் அப்ரின் அக்தருடான சந்திப்பைத் தொடர்ந்தே, சுமந்திரன் இந்தத் தகவலை வெளியிட்டியிருக்கின்றார். அமெரிக்கா சில உறுதியான தீர்மானங்களை மேற்கொள்ளவுள்ளதாக முன்னர் ஒருமுறை சுமந்திரன் கூறியிருந்தார். ஆனால், அவ்வாறான எந்தவொரு நகர்வும் பின்னர் இடம்பெறவில்லை. அமெரிக்காவின் தலையிடும் எல்லையை புரிந்து கொள்வதில் ஏற்படுவதிலுள்ள சிக்கல்களே இவ்வாறான அவசர அறிக்கைகளுக்கு காரணமாகும்.

ரணில் அண்மையில் மேற்குலக ஊடகமொன்றுடனான சம்பாசணையின் போது, சர்வதேச விசாரணையை நிராகரித்திருந்தார். ரணில் மட்டுமல்ல – தென்னிலங்கையின் அரசியலை பிரதிநிதித்துவம் செய்துவரும், எந்தவொரு சிங்கள அரசியல்வாதியும் இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது போர்க் குற்றங்கள் இடம்பெற்றமையை ஏற்றுக்கொள்ளவில்லை. இலங்கை இராணுவம் நாட்டை பாதுகாப்பதற்கான யுத்தத்தை முன்னெடுத்து, அதற்காக தியாகங்களை செய்ததாகவே கூறிவருகின்றது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெற்றியை ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடி வருகின்றது.

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ரணில் பலமானதொரு பிரதமராக இருந்த காலத்திலும் இந்த இராணுவ கொண்டாட்டங்கள் இடமபெற்றிருந்தன. இந்தக் காலத்தில் ரணிலுடன் சம்பந்தன் அரசியல் தேனிலவில் இருந்தார். ஆனால், இன்னொருபுறம், கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் விடுதலை புலிகளையும் அதன் தலைவரையும் புகழ்ந்து பாராளுமன்றத்தில் பேசிக் கொண்டிருந்தனர். விடுதலைப் புலிகள் அமெரிக்காவை பொறுத்தவரையில் ஒரு பயங்கரவாத அமைப்பு. 1997இல் அமெரிக்கா விடுதலைப் புலிகள் இயக்கத்தை சர்வதேச பயங்கரவாத அமைப்பாக பட்டியலிட்டது. யுத்தம் முடிவுற்று, பதினான்கு வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும்கூட அந்தத் தடை நீக்கப்படவில்லை. இதனை தவறென்று இதுவரையில் எந்தவொரு தமிழ் தேசிய கட்சியும் பொதுவெளியில் பேசியதில்லை. அமெரிக்காவை கண்டித்ததில்லை. மேற்குலகத்தில் இயங்கிவரும் புலம்பெயர் அமைப்புகளும் அமெரிக்காவை கண்டித்ததில்லை – காரணம் பயம்.

தமிழ் தேசிய தரப்புகளின் அமெரிக்கா தொடர்பான அணுகுமுறை இரட்டைத் தன்மையானது. ஒருபுறம் அமெரிக்கா இலங்கையின்மீது மனித உரிமைகள் சார்ந்து அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமென்று எதிர்பார்கின்றனர் – ஆனால் மறுபுறமோ, தங்களின் வாக்கு வங்கி அரசியலுக்காக புலிகளை புகழும் அரசியலும் தேவையென்று கருதுகின்றனர். இந்த இரட்டை நிலைப்பாடு, மேற்குலத்தை பொறுத்தவரையில் பொருத்தமற்றது. மேற்குலகம் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை நியாயமானதாக ஒருபோதுமே கருதியதில்லை. ஆனால், மேற்குலக ஜனநாயக எல்லைக்குள் புலம்பெயர் அமைப்புகளை சுதந்திரமாக இயங்க அனுமதித்தது. ஹமாஸுக்கு ஆதரவாக கூட்டம் போடுபவர்கள் அமெரிக்காவில் இயங்குவதற்கும் சுதந்திரம் உண்டு – ஆனால், அமெரிக்காவின் கொள்கை நிலைப்பாடோ, ஹமாஸை அழிப்பதற்கு ஆதரவானது. கருத்துச் சுதந்திரமென்னும் பெயரில் சில விடயங்களில் மேற்குலகம் தாராளமாக நடந்து கொள்கின்றது. அதனை தங்களுக்கு ஆதரவானதென்று எவரேனும் கருதினால் அது அவர்களது அரசியல் அறியாமையாகவே இருக்க முடியும்.

இலங்கை விடயத்தில் அமெரிக்காவின் கொள்கை நிலைப்பாடு மிகவும் தெளிவானது. இலங்கையின் பிரச்னைக்கான எந்தவொரு தீர்வும் உள்நாட்டுக்குள் – அனைத்து மக்களின் ஆதரவுடன் கண்டடையக்கூடியதாக இருக்க வேண்டும். இலங்கை அதன் சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டும். அதாவது, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக விழுமியங்களை பாதுகாக்க வேண்டும். இது ஒரு பரிந்துரை மட்டும்தான் என்பதை தமிழ் அரசியல் பரப்பிலுள்ள பலர் புரிந்துகொள்வதில்லை. மனித உரிமைகளை கடைப்பிடிப்பதை கொள்கை நிலைப்பாடாகக் கொண்டிருக்காத சவுதி போன்ற நாடுகளுடனும் அமெரிக்கா நட்புறவு கொண்டிருக்கின்றது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, இந்தப் பின்புலத்தில் இந்து சமுத்திர பிராந்தியத்தில் தனது நலன்கள் மேலும் நெருக்கடிக்குள் செல்வதை தடுப்பதே அமெரிக்காவின் பிரதான ஈடுபாடு, அதற்கேற்றவாறு, நாடுகளுடன் புதிய முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளாத வகையிலேயே – அமெரிக்கா அதன் நகர்வுகளை முன்னெடுத்துவருகின்றது. அப்படித்தான் ஓர் உலக சக்தி இயங்கவும் முடியும். தமிழர்களுக்காக அமெரிக்கா இயங்க முடியாது – தமிழர்களும் ஒரு விடயமாக நோக்கப்படலாம். அவ்வாறு நோக்கினால் அதனை சாதகமாக தமிழர்கள் கருதிக்கொள்ளலாம். அதற்காக, அமெரிக்கா தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை பெற்றுத் தருவதற்கான கரிசனையை கொண்டிருப்பதாக எவரேனும் எண்ணிக் கொண்டால், அது அவர்களது அரசியல் பார்வையிலுள்ள கோளாறாகவே இருக்க முடியும்.

# பலஸ்தீனம் மீதான இனவழிப்பை கண்டித்து யாழில் போராட்டம்!

*யாழ்ப்பாணம், ஒக். 17*

பலஸ்தீன மக்களுக்காக ஆதரவுக் குரல் கொடுக்கவும் அவர்கள் மீதான இன அழிப்பை கண்டித்தும் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக கண்டன போராட்டம் ஒன்றை முன்னெடுக்க சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இதுதொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில்,

இஸ்ரேலின் தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்பால் பலஸ்தீன மக்கள் மேற்கு கரையிலும் காஸாவிலும் சுருக்கப்பட்டுள்ளனர். இஸ்ரேல் அரசாங்கத்தினதும் அதன் மேற்குலக கூட்டாளி நாடுகளினதும் அரசியல் பொருளாதார நலன்களுக்காக காஸா மக்கள் பலியாக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக குழந்தைகளும், பெண்களும் அதிகமாகக் கொல்லப் பட்டனர். இத்தகைய மக்களுக்கு எதிரான கொடூர தாக்குதலைக் கண்டிக்கின்றோம். அத்துடன் காஸா மீதான ஆக்கிரமிப்பு யுத்தமானது தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் முடக்கப்பட்டு கொன்றொழிக்கப்பட்டதற்கு ஒப்பானதாக பார்க்கப்பட வேண்டியதே. எனவே ஒடுக்கப்படும் பலஸ்தீன மக்களுக்கு விடுதலை வேண்டி ஒருமித்து குரல் கொடுப்போம் .

இஸ்ரேலிய பயங்கரவாத ஆடசியினர் காஸா மக்களுக்கான உணவு, மருத்துவம், மின்சாரம், தண்ணீர் ஆகிய அடிப்படை தேவைகள் சென்றடைவதை தடுத்ததோடு பல கட்டடங்களைத் தரைமட்டமாக்கி மக்களையும் கொன்றொழித்து வருகின்றனர். எல்லா ஒடுக்குமுறைப் போர்களிலும் குழந்தைகளின் உடலங்களே உலக மக்களின் மனச்சாட்சியை உலுக்குவதாக அமைந்து விடுவது போல காஸா குழந்தைகள் பூக்களாகவும் பிஞ்சுகளாகவும் கருகிக்கிடப்பது தாங்கமுடியாத மனவேதனையைத் தருகின்றது. இந்த அனுபவங்களைத் தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் சுமந்தனர்.

உலக வல்லாதிக்க நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா போன்றன இஸ்ரேலின் காஸா மக்கள் மீதான இன அழிப்புக்கு உடந்தையாக இருப்பதோடு ஏனைய நாடுகள் இந்த அழிப்பை தடுத்து விடக் கூடாது என்பதற்காக கடலிலும் தரையிலும் பாதுகாப்பு அரண்களாக யுத்தக் கப்பல்களையும் தமது படைகளையும் நிலைநிறுத்தியுள்ளன. இதில் அவர்களின் அரசியல் பொருளாதார அதிகார நலன்கள் இருக்கின்றது. காஸா மக்களுக்கு எதிரான இந்த தாக்குதலை வேடிக்கை பார்த்து நிற்கும் அரபு நாடுகளும் ஏனைய நாடுகளும் தமது பொருளாதார நலனையும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளுக்கு தமது அடிமை விசுவாசத்தையும் வெளிப்படுத்தி நிற்கிறார்கள்.

உக்ரைன், ரஷ்ய போரில் ரஷ்யாவுக்கு எதிராக கண்டனங்களை வெளிப்படுத்தி நின்ற ஐக்கிய நாடுகள் சபை இங்கு அனுதாபங்களை மட்டுமே வெளிப்படுத்தி தனது பக்கச் சார்பை நிரூபித்து நிற்கின்றது. பாதுகாப்பான சுதந்திரமான பலஸ்தீன நாடு அமைவதை உலகின் பெரும்பாலான நாடுகள் குறிப்பிட்டு வருவது போன்று அந்த மக்களின் இறையாண்மைக்காகவும் சுதந்திர உரிமைக்காகவும் பலஸ்தீன மக்களுக்காக ஆதரவுக் குரல் கொடுப்பதற்கு எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ் மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளையும் ஒன்று கூடுமாறு வேண்டுகின்றோம் - என்றுள்ளது.

(ஐ)

# கஞ்சாவை பயிரிடுவதற்கான பிரேரணை அமைச்சரவைக்கு

*கொழும்பு, ஒக். 17*

இலங்கையில் கஞ்சாவை பயிரிடுவதற்கான பிரேரணை அமைச்சரவையில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றவுடன் இலங்கையின் ஏற்றுமதித் துறையில் கஞ்சாவும் அறிமுகப்படுத்தப்படும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன.


குறித்த பிரேரணை ஏற்கனவே அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு சபாநாயகரின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

மேலும், கஞ்சாவை ஒரு மருத்துவ மருந்தாகப் பயன்படுத்த ஆயுர்வேதத் திணைக்களமும் அண்மையில் தனது ஒப்புதலை வழங்கியிருந்தது.

அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்றால், இலங்கையின் ஏற்றுமதித் துறையின் வளர்ச்சிக்கும் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும் கஞ்சா பெரிதும் பயனளிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும்.வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். அதிகாரிகள் வலியவந்து உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**இடபம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். புதுமைகளைச் எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். அமோகமான நாள்.

**மிதுனம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கடகம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். திருப்தி உண்டாகும். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. சக ஊழியர்களால் நினைத்ததை முடிப்பீர்கள். முன்னேறும் நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். இனிமையான நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். தான் உண்டு தான் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. புதிய வாகனம் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். மற்றவர்களின் மனநிலையை உணர்ந்து பேசும் பக்குவம் உண்டாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். நன்மை நடக்கும் நாள்.

**மகரம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். சாதிக்கும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். உற்சாகமான நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். வெளிப்படையாக பேசு வதை தவிர்க்கவும். பொறுமை தேவைப்படும் நாள்.

# கோவில், இந்துகளுக்கு எதிரான ஆட்சியே தமிழகத்தில் நடக்கிறது

## அண்ணாமலை குற்றச்சாட்டு

அவிநாசி, ஒக். 17

'கோவில் சிலைகள் திருடப்படுவதை தி. மு. க. அரசு வேடிக்கை பார்த்து வருகிறது. கோவிலுக்கும் இந்துக்களுக்கும் எதிரான ஆட்சி தமிழகத்தில் நடக்கிறது' என அண்ணாமலை விமர்சித்துள்ளார.

மூன்றாம் கட்ட பாத யாத்திரையை அவிநாசியில் அண்ணாமலை நேற்று தொடங்கினார். இந்த பாதயாத்திரையில், மத்திய அமைச்சர்கள் பியுஷ்கோயல், எல். முருகன், சட்டமன்ற



உறுப்பினர் வானதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

யாத்திரைக்கு இடையே நடந்த கூட்டத்தில் தொண்டர்களிடம் அண்ணாமலை பேசியவை வருமாறு,

கோவில் சிலைகள் திருடப்படுவதை தி. மு. க. அரசு வேடிக்கை பார்த்து வருகிறது. தமிழகத்தின் மிகப்பெரிய திருடன் இந்து அறநிலையத்துறை தான். கோவிலுக்கும், இந்துக்களுக்கும் எதிரான ஆட்சி தமிழகத்தில் நடக்கிறது. பிரதமர் மோடி சொன்னதை பொய் என்று கூறும் ஸ்டாலின்தான் பொய் சொல்கிறார் - என்றார். (ஐ)

# பழனிசாமிக்கு எதிரான வழக்கு உயர்நீதிமன்றம் ஒத்திவைப்பு!

சென்னை, ஒக். 17

எடப்பாடி பழனிசாமி எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் நீடிப்பதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில், கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்ய மனுதாரருக்கு உத்தரவிட்டுள்ள சென்னை உயர் நீதிமன்றம், வழக்கின் விசாரணையை நவம்பர் 3ஆம் திகதிக்கு தள்ளிவைத்துள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், அ. தி. மு. க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினரான சுப்புரத்தினம் என்பவர், எடப்பாடி பழனிசாமி சொத்துகள், கல்வி தகுதி என்பவற்றை வேட்பாளர் பட்டியலில் மறைத்துள்ளார். இது ஊழல் மற்றும் சட்ட மீறலாகும் எனவே, அவரை எடப்பாடி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக செயல்பட நீதிமன்று தடை விதிக்க வேண்டும் என்று தனது மனுவில் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி கங்காபூர்வாலா மற்றும் நீதிபதி பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், "வேட்புமனுவில் தகவல்களை மறைத்ததால், எழுத்தாணை மனு தாக்கல் செய்யலாம். அதன் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.மேலும், வேட்புமனுவில் தகவல்களை மறைத்துள்ளதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டை எடப்பாடி பழனிச்சாமி மறுக்கவில்லை" என வாதிடப்பட்டது.

அப்போது தமிழக அரசுத் தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் "வேட்புமனுவில் தவறான தகவல் தெரிவிப்பது தகுதி இழப்பு ஆகாது. இது தொடர்பாக, தேர்தல் வழக்கு தான் தாக்கல் செய்ய வேண்டும்" என தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி, வேட்புமனுவில் தவறான தகவல் தெரிவித்திருந்தால் தேர்தல் வழக்கு மட்டுமே தாக்கல் செய்ய முடியும். தகுதி இல்லாதவர் பதவி வகிப்பதை எதிர்த்துதான் எழுத்தாணை வழக்கு தாக்கல் செய்ய முடியும். இந்த வழக்கை தாக்கல் செய்ய முடியாது என சுட்டிக்காட்டினார். அப்போது மனுதாரர் தரப்பில், உச்ச நீதிமன்ற உத்தரவின்படி இந்த வழக்கை தாக்கல் செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், வேட்புமனுவில் தவறான தகவல் தெரிவித்தால் எழுத்தாணை வழக்கை தாக்கல் செய்யலாம் என்பது தொடர்பான தீர்ப்புகளை தாக்கல் செய்ய மனுதாரர் தரப்புக்கு உத்தரவிட்டு விசாரணையை நவம்பர் 3ஆம் திகதிக்கு தள்ளிவைத்தனர்.

# இலங்கை கடற்படையினரின் அத்துமீறலுக்கு முடிவு கட்டுக

## மத்திய அரசை வலியுறுத்தும் தமிழ்நாடு அரசியல்வாதிகள்

சென்னை, ஒக். 17

தமிழக மீனவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டிருப்பதற்கு கண்டனம் தெரிவித்த பா. ம. க. தலைவர் அன்புமணி மற்றும் த. மா. கா. தலைவர் ஜி. கே. வாசன், இலங்கை கடற்படையினரின் அத்துமீறலுக்கு முடிவுகட்ட வேண்டுமென மத்திய அரசுக்கு வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து அன்புமணி ராமதாஸ் வெளியிட்ட அறிக்கையில்,

இராமேஸ்வரம் பகுதியிலிருந்து வங்கக் கடலுக்கு மீன்பிடிக்க சென்ற தமிழக மீனவர்கள் 15 பேரை இலங்கை கடற்படையினர் கச்சதீவு பகுதியில் கைது செய்துள்ளனர். இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்து இலங்கை கடற்படையினர் நிகழ்த்தியுள்ள இந்த அத்துமீறல் கடுமையாக கண்டிக்கத்தக்கது. வங்கக்கடலில் தமிழக மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிக்கக்கூடாது என்ற எண்ணத்தில் இலங்கை செயல்பட்டு வருகிறது.

அதற்கேற்ப ஒருபுறம் கடல் கொள்ளையர்கள், மறுபுறம் மீனவர்கள் கைது என இரு முனை தாக்குதலை நடத்துகிறது. எனவே இலங்கை கடற்படையினரின் இதுபோன்ற அத்துமீறலுக்கு மத்திய அரசு நிரந்தரமாக முடிவு கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை, ஜி. கே. வாசன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தவை வருமாறு,

மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைப்பிடித்திருப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது. தமிழக மீனவர்கள் இந்திய எல்லையில் மீன்பிடித்து கொண்டு இருக்கும் போதே இலங்கை கடற்படை எல்லை தாண்டியதாக கூறுவது கண்டிக்கத்தக்கது. இதனால் இரு நாடுகளுக்கிடையே உள்ள நல்லுறவு பாதிக்கும். எனவே மத்திய, மாநில அரசுகள் தமிழக மீனவர்கள் பிரச்னையில் இலங்கை அரசுக்கு உரிய அழுத்தம் கொடுத்து பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் - என்றார். (ஐ)

ஈழநாடு



# மாங்குளம் ரயில் நிலையத்தில் நூலகம், குடிதண்ணீர் வசதிகள்!

## பல்வேறு அமைப்புக்களின் உதவியுடன்





முல்லைத்தீவு, ஒக். 17

**முல்லைத்தீவு-மாங்குளம் நகர் பகுதியில் அமைந்துள்ள ரயில் நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வசதிகள் மற்றும் நூலக வசதிகள் உள்ளிட்ட இதர வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.**

**பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் மாங்குளம் ரயில் நிலையத்தினர் தொடர்பு கொண்டு விடுத்த கோரிக்கைக்கு அமைவாக பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் பல்வேறு விதமான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**

அந்த வகையில் ரயில் நிலையத்தை சூழவுள்ள பகுதிகள் துப்புரவுப் பணிகள் இடம்பெற்று அங்கு அழகுபடுத்தல் வேலைகளும் மர நடுகைத் திட்டங்களும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு அங்கமாக நேற்று முன் தினம் பல்வேறு நலத்திட்டங்கள் மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டன.

பி.பி.கே நிறுவனத்தின் அனுசரணையில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வசதியும் நூலகத்துக்கான அலுமாரி வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

சிறகுகள் அமைப்பினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரால் நூலகத்திற்கான நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டு நேற்று முன் தினம் அது திறந்து வைக்கப்பட்டது.

கிரீன் லேயர் அமைப்பினால் ரயில் நிலைய வளாகத்தில் 50 பயன்தரும் மரக்கன்றுகள் நாட்டி வைக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

ரயில் நிலைய அதிபர் க.சுதர்சனின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், யாழ். ரயில் நிலைய அத்தியட்சகர், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கனகேஸ்வரன், மருத்துவர் க.உதயசீலன், பி.பி.கே கணக்காய்வு நிறுவனத்தின் வவுனியா கிளை முகாமையாளர், கிரீன் லேயர் அமைப்பின் பணிப்பாளர், சிறகுகள் அமைப்பினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

(அ)

# அடுத்தடுத்து பதவி விலகிய இரண்டு உயர் அதிகாரிகள்!

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் நெருக்கடி

கொழும்பு, ஒக். 17

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பணி புரியும் உயர் அதிகாரிகள் இருவர் திடீரென தமது பதவியை இராஜினாமா செய்துள்ள சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அண்மைக் காலமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் விற்பனை மற்றும் நிதித் துறைகளில் பணியாற்றிவந்த தலைவர்கள் உட்பட பல அதிகாரிகள் தமது பதவியை இராஜினாமா செய்து வருகின்றனர்.

மேலும் இவ்வாறு இராஜினாமா செய்தவர்களில் பெரும்பாலானோர் வேறு வேலைகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

இதன் காரணமாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகக் கட்டமைப்பில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தகவல் கசிந்துள்ள நிலையில், வெற்றிடங்களுக்கு வேறு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய களஞ்சிய நிலையத்தின் தலைவர் மொஹமட் உவைஸ் தனிப்பட்ட காரணங்களுக்காக தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# விமல் வீரவன்ஸ சீனா பயணம்!

கொழும்பு, ஒக். 17

சர்வதேச ஒத்துழைப்புக்கான பெல்ட் அன்ட் ரோட் மாநாட்டில் பங்கேற்பதற்காக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச சீனா செல்கின்றார்.

இன்றும் நாளையும் சீனாவின் பீஜிங் நகரில் நடைபெறவுள்ள இம்மாநாடு, சீன அரசு நடத்தும் இரண்டு முக்கிய இராஜதந்திர மாநாடுகளில் ஒன்றாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

சீன ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் 90 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து அரசியல் தலைவர்கள் பங்கேற்க உள்ளனர்.

சீனாவில் நடைபெறும் பெல்ட் அன்ட் ரோட் திட்டத்தின் 03ஆவது சர்வதேச ஒத்துழைப்புக்கான மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் சீனா சென்றுள்ளார்.

(அ)

# மனைவியை கொலை செய்துவிட்டு தலைமறைவாகிய கணவன் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 17

நாவற்குழி பகுதியில் மனைவியை கொலை செய்து விட்டு தப்பிச் செல்ல முற்பட்ட கணவன் பொலிஸ் புலனாய்வாளர்களால் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த கைது நடவடிக்கை அதிரடியாக முன்னெடுக்கப்பட்டது.

நாவற்குழி ஐயனார் கோயிலடியில் வசிக்கும் அஜந்தன் யமுனா என்கிற 23 வயதான இரண்டு பிள்ளைகளின் தாய் கொலை செய்யப்பட்ட நிலையில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

இந்நிலையில் வீட்டில் கணவனை காணாத நிலையில் பொலிஸாரின் சந்தேகம் வலுத்தது.

குடும்ப தகராறில் கணவரால் குறித்த பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என கருதிய பொலிஸார் கணவரை நோக்கி தீவிர தேடுதலை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையில் முச்சக்கரவண்டியில் சந்தேகநபர் தப்பிக்க முற்பட்ட வேளையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தீவிர விசாரணை முன்னெடுக்கப்பட்ட நிலையில் "தான் மனைவியை தாக்கியதாகவும் உயிரிழந்தது தனக்கு தெரியாது" என சந்தேக நபர் தெரிவித்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைதான சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (அ)

# வைத்தியசாலைகளில் எக்ஸ்ரே பரிசோதனைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஒக். 17

நாட்டிலுள்ள ஆறு வைத்தியசாலைகளில் எக்ஸ்ரே பரிசோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எக்ஸ்ரே பரிசோதனை செய்ய தேவையான பணியாளர்கள் இல்லாததே காரணம் என அவர்கள் சுட்டிக்காட்டினர்.

கிரிபத்கொட ஆதார வைத்தியசாலை, மினுவாங்கொடை ஆதார வைத்தியசாலை, அஹலியகொட ஆதார வைத்தியசாலை, பொரளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலை மற்றும் இரண்டு வைத்தியசாலைகளின் செயற்பாடுகள் தடைப்பட்டுள்ளதாக அரசாங்க கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் எக்ஸ்ரே பரிசோதனைப் பிரிவு மூன்று வாரங்களாக செயலிழந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# 13 வயது சிறுமி துஷ்பிரயோகம் 15 வயது மாணவன் கைதானார்!

கொழும்பு, ஒக். 17

8 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 15 வயது மாணவன் ஒருவரை ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பங்கதெனிய - கொட்டபிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் தரம் 08 இல் கல்வி கற்கும் சிறுமியை கடந்த 14 ஆம் திகதி பிற்பகல் இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக சிறுமியின் பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். முறைப்பாட்டின் பிரகாரம் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

துஷ்பிரயோகத்திற்கு உள்ளானதாக கூறப்படும் சிறுமி, மருத்துவ பரிசோதனைக்காக ஹலவத்த பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சிறார் சந்தேக நபர் ஹலவத்தை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (அ)

# கொழும்பில் அட்டூழியம் புரிந்த ஒருவர் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் பலி!

கொழும்பு, ஒக். 17

கந்தானை பிரதேசத்தில் இடம்பெற்ற பல துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபரை கைது செய்ய சென்றபோது, நேற்று காலை பொலிஸாருடன் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் சந்தேக நபர் உயிரிழந்துள்ளார்.

சந்தேக நபரான ராமையா ஜெயராஜ் சப்புகஸ்கந்த கோனவில பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் பதுங்கியுள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த வீட்டை பொலிஸார் சோதனையிட்டுள்ளனர்.

அப்போது, சந்தேக நபர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து கிரிபத்கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# தினேஷ் ஷாப்டரின் உடலை அடக்கம் செய்வதற்கு அனுமதி

கொழும்பு, ஒக். 17

விசாரணைகளின்போது தோண்டியெடுக்கப்பட்ட வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் சடலத்தை அடக்கம் செய்ய அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, கொழும்பு ஜாவத்தை மயானத்தில் அவரது சடலத்தை அடக்கம் செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திர ஜயசூரிய உத்தரவிட்டுள்ளார்.

தினேஷ் ஷாப்டரின் மரணத்திற்கான காரணத்தைக் கண்டறிய நியமிக்கப்பட்ட ஐவர் அடங்கிய மருத்துவக் குழு, தகனம் செய்வது பொருத்தமற்றது என முன்வைத்த பரிந்துரைகளை ஆராய்ந்த நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

(அ)

# கீரிமலை ஜனாதிபதி மாளிகையை குத்தகைக்கு கொடுக்கவேண்டாம்!

## அகில இலங்கை இந்து மாமன்றம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 17

**யாழ்ப்பாணம் கீரிமலையில் உள்ள ஜனாதிபதி மாளிகையை நீண்டகால குத்தகை என்ற பெயரில் தென் இலங்கையில் உள்ள தனியார் நிறுவனங்களுக்கு ஒப்படைக்க கூடாது என அகில இலங்கை இந்து மாமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.**

கீரிமலை-காங்கேசன்துறை வீதியில் உள்ள அரச மாளிகையும் அச்சுற்றாடலில் அழிக்கப்பட்ட சைவ ஆலய மடங்கள் தொடர்பாக அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் ஆறு திருமுருகன் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கீரிமலை ஆதிசிவன் கோயில், சடையம்மா மடம், உச்சிப்பிள்ளையார் கோவில் போன்றவை இடிக்கப்பட்டு கட்டப்பட்ட இந்த மாளிகையை யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துக்கு அல்லது இந்து சமயம் சார்ந்த நிறுவனங்களுக்கு வழங்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் 106 பரப்பு கொண்ட சைவ சமய நிறுவனத்தின் மடத்தை அழித்து ஹோட்டல் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அந்த நிலத்தை சமய நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தங்க முலாம் பூசப்பட்ட 949 பந்துகள் சிக்கின!

## நால்வர் கைது

கொழும்பு, ஒக். 17

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொக்மாடுவ நுழைவாயிலில் வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர், காரில் இருந்ததாக சந்தேகிக்கப்படும் 949 சிறிய தங்க முலாம் பூசப்பட்ட பந்துகளுடன் காரில் பயணித்த நால்வரை கைது செய்துள்ளனர்.

தனமல்வில, அதிலிவெவ மற்றும் பயாகல ஆகிய பகுதிகளில் வசிக்கும் 35, 31, 22 மற்றும் 21 வயதுடைய நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிகம பிரதேசத்தில் உள்ள சகோதரர் வீட்டுக்கு தாம் வந்ததாக சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த தங்க முலாம் பூசப்பட்ட சிறிய பந்துகள் சில வாரங்களுக்கு முன்னர் கண்டி பிரிமத்தலவில் இருந்து வீட்டில் உள்ள பித்தளை விளக்குகளுக்கு பதிலாக கொள்வனவு செய்யப்பட்டதாகவும் சந்தேகநபர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஓடும் பஸ்ஸுக்குள் மாணவி பலாத்காரம்!

## சாரதி, நடத்துநர் உட்பட மூவர் கைது

கொழும்பு, ஒக். 17

குருநாகல் பகுதியில் ஓடும் பயணிகள் பஸ்ஸுக்குள் வைத்து 15 வயதுடைய பாடசாலை மாணவியின் சீருடைகள் பலவந்தமாக அகற்றப்பட்டு, பாலியல் வல்லுறவுக்குள்ளாக் கப்பட்டுள்ளார்.

மாணவியை வல்லுறவுக்கு உட்படுத்திய நபரும், குற்றச் செயலுக்கு உறுதுணையாக இருந்த சாரதியும், நடத்துநரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருநாகலிலிருந்து நிககொல்ல நோக்கிச் செல்லும் தனியார் பயணிகள் பேருந்தில் பாடசாலையிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே குறித்த மாணவி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்களை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு குருநாகல் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாணவியை வல்லுறவுக்குள்ளாக்கிய சந்தேகநபர் கும்பக்வெவ நிககொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடையவர். யக்கல பிரதேசத்தில் உள்ள நிறுவனமொன்றில் களஞ்சிய முகாமையாளராக பணிபுரிகிறார்.

பஸ் சாரதி, வெல்கல பிரதேசத்தில் வசிக்கும் 34 வயதுடையவர். நடத்துநராக இருப்பவர் பெரியகடுனாலாவ பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடையவர்.

கடந்த 11ஆம் திகதி வழமை போன்று பாடசாலை முடிந்து பாடசாலைக்கு அருகில் உள்ள நிறுத்தத்தில் இருந்து, இந்த மாணவி பஸ்ஸில் ஏறியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் மாணவியின் இல்லம் அமைந்துள்ள வடுகம பகுதியை பஸ் அண்மித்தபோது,

மாணவி, சாரதி, நடத்துநர் மற்றும் அவரை வல்லுறவுக்குள்ளாக்கிய சந்தேக நபர் மட்டுமே பஸ்ஸில் இருந்தனர்.

வடுகம பிரதேசத்திற்கு அருகில் மாணவி பஸ்ஸில் இருந்து இறங்க முற்பட்டபோது, சந்தேக நபர் அவரை பேருந்தின் பின் இருக்கைக்கு இழுத்துச் சென்றதாகவும், நடத்துநர் பஸ்ஸின் கதவுகளை மூடி ஜன்னல்களில் உள்ள திரைகளை மூடியதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பஸ்ஸில் ஒலித்துக் கொண்டிருந்த பாடல் சத்தத்தை சாரதி அதிகப்படுத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் மாணவியை இறக்காமல் பயணித்தது. பஸ் பயணத்தின் முடிவிடத்துக்குச் சென்று, மீண்டும் திரும்பிக் கொண்டிருந்ததாகவும், இதற்கிடையில், முக்கிய சந்தேக நபரால் மாணவி பலாத்காரம் செய்யப்பட்டதாகவும், அவரது உடை உள்ளிட்ட பாடசாலைச் சீருடையின் சில பகுதிகள் கூட அகற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி, முன்கூட்டிய திட்டத்தின் பிரகாரம் சாரதி மற்றும் நடத்துநர், பஸ்ஸில் இச்செயற்பாட்டிற்காக இடம் வழங்கியது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ் மா அதிபர் எஸ்.வை.செனவிரத்ன தெரிவித்தார்.

இச்சம்பவத்திற்குப் பிறகு மாணவி பஸ்ஸில் இருந்து இறங்க வேண்டிய இடத்தில் இறக்கிவிடப்பட்டார். இது குறித்து பெற்றோரிடம் கூறாமல் இருந்த அவர், கடந்த 12ஆம் திகதி பாடசாலைக்குச் சென்றபோது ஆசிரியையிடம் கூறியுள்ளார். இதுபற்றி ஆசிரியை பொலிசாருக்கு தகவல் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

இதன் பிரகாரம் கும்பக்கடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு கடந்த 13ஆம் திகதி இந்தக் குற்றச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்தனர்.

குற்றத்திற்கு பயன்படுத்தப்பட்ட பஸ்ஸில் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், அதன் வழித்தட அனுமதிப்பத்திரத்தை ரத்து செய்யுமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்களை வெளியிட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஒக். 17

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை முடிவடைந்த சில மணி நேரங்களுக்குள் சமூகவலைத்தளங்களில் குறித்த வினாத்தாள்களை வெளியிட்டவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

சமூகவலைத்தளங்களில் குறித்த வினாத்தாள்களை வெளியிட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை நேற்று முன் தினம் காலை 2 ஆயிரத்து 888 பரீட்சை நிலையங்களில் நடைபெற்றது.

இந்த பரீட்சைக்கு 3 இலட்சத்து 37 ஆயிரத்து 956 பேர் தோற்றியிருந்தனர்.

குறித்த பரீட்சை நேற்று முன் தினம் நண்பகல் 12.15 மணிக்கு முடிவடைந்த நிலையில், சில மணி நேரங்களில் வினாத்தாள்கள் மற்றும் விடைத்தாள்கள் சமூகவலைத்தளங்களில் வெளியாகின.

புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்பட்ட சில மணித்தியாலங்களுக்குள் அதனை பகிரங்கப்படுத்த வேண்டாம் என பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் மற்றும் கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பரீட்சை எழுதியதன் பின்னர் வீடு திரும்பும் மாணவர்கள், மேலும் மன உளைச்சலுக்கு ஆளாவதைத் தடுக்கும் நோக்கில் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

எனினும், அறிவுறுத்தலை மீறி புலமைப்பரிசில் பரீட்சை முடிவடைந்த சில மணி நேரங்களிலேயே வினாத்தாள்கள் பகிரங்கப்படுத்தப்பட்டதால் சில மாணவர்கள் மன உளைச்சலுக்கு ஆளானதாக தெரிவிக்கிறது.

எவ்வாறாயினும், பரீட்சை முடிவடைந்த சில மணித்தியாலங்களில் சமூக ஊடகங்களில் வினாத்தாள்கள் வெளியான போதிலும், பரீட்சையின் இரகசியத்தன்மைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர் தெரிவித்துள்ளார். (அ)

# உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு நிரந்தர ஆணையாளர் உடனே வேண்டும்!

## அதிகாரிகள் அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஒக். 17

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு நிரந்தர ஆணையாளர் ஒருவரை நியமிப்பதில் ஏற்படும் தாமதம் காரணமாக, வருமான இலக்குகளை அடைவதில் பாரிய தடை ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் அரசாங்கத்தை எச்சரித்துள்ளனர்.

கடந்த ஒன்றரை மாதங்களாக இறைவரி திணைக்களத்திற்கு நிரந்தர ஆணையாளர் நியமிக்கப்படவில்லை.

சட்டத்தின் அடிப்படையில் சில கடமைகளை செய்ய நிரந்தர ஆணையாளர் அவசியம் என்பதால், திணைக்களத்தின் செயல்பாடுகளில் பெரும்பகுதி முடங்கியுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நிரந்தர ஆணையாளருக்கே, செலுத்தப்படாத வரி நிலுவைகளை வசூலிக்கவும், வங்கிக் கணக்குகளை இடைநிறுத்தவும், புதிய வரிக் கோப்புகளைத் திறக்கவும், வரி செலுத்தத் தவறியவர்களின் சொத்துக்களைக் கைப்பற்ற மற்றும் வரி மதிப்பீட்டு அறிக்கைகளைத் தொகுக்கும் உத்தரவுகளை வழங்க முடியும்.

எனவே உடனடியாக நிரந்தர ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ச்சியாக வலுப்பெற்று வருகிறது.

இந்த ஆண்டு அரசின் வரி வருமானம் இலக்கு ஆயிரத்து 667 பில்லியன் ரூபாய்களாகும்.

எனினும், அரசின் வரி வருமான இலக்கை அடைவதற்கு 466 பில்லியன் ரூபாய் வருமானம் குறைவாக உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மலையக ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, ஒக். 17

மலையகத்துக்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த கடுகதி தொடருந்தொன்று நேற்று மதியம் 12.15 அளவில் ஹப்புத்தளை மற்றும் தியத்தலாவை ரயில் நிலையங்களுக்கு இடையில் தடம் புரண்டது.

இதன் காரணமாகவே, மலையகத்துக்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

இந்தநிலையில், குறித்த ரயிலை வழித்தடமேற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டது. (அ)

# கல்வி, சுகாதாரம், நலன்புரிக்கு 2024 பட்ஜெட்டில் முன்னுரிமை!

## நிதி இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்



கொழும்பு, ஒக். 17

**2024 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி, சுகாதாரம் மற்றும் நலன்புரிச் செலவுகள் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.**

பொருளாதாரத்தை வலுப்படுத்தி மக்களுடன் இணைந்து நிற்க அரசாங்கம் முயற்சிக்கும் இவ்வேளையில் வரவு-செலவுத் திட்டம் குறித்த உண்மையை மறைக்கும் எண்ணம் தமக்கு இல்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தமது மாவட்டங்களில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு இரண்டு வருடங்களாக ஒதுக்கப்படாத நிதியை ஒதுக்குமாறு பொதுஜன பெரமுன ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் மக்களுக்கு சில நிவாரணங்களை வழங்குவது குறித்து அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நிதியமைச்சருமான பசில் ராஜபக்ஷ கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)



# பலஸ்தீன தூதரகத்துக்கு சென்ற மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு, ஒக். 17

பலஸ்தீன மக்களுக்கு ஆதரவை தெரிவிக்கும் வகையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று கொழும்பில் உள்ள பலஸ்தீன தூதரகத்துக்கு விஜயம் செய்தார்.

இதன்போது பலஸ்தீன தூதுவருடன் கலந்துரையாடிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, உலகில் எங்கும் பயங்கரவாதத்திற்கு இடமில்லை என்றும் போர் தீர்வாக அமையாது என்றும் கூறியுள்ளார்.

மேலும் யுத்த காலங்களில் இலங்கை எதிர்கொண்ட சவால்களை சுட்டிக்காட்டிய முன்னாள் ஜனாதிபதி, சமாதானத்தின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

பலஸ்தீனத்துடனான ஒற்றுமைக்கான இலங்கை சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர் என்ற முறையில் தான் பலஸ்தீனத்தின் கொள்கையை ஆதரிப்பதாகவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(அ)

# புலமைப்பரிசில் பரீட்சையின்போது காயமடைந்த மாணவனுக்கு உதவி புரிந்தார் பொலிஸ் அதிகாரி!

கொழும்பு, ஒக். 17

இம்முறை புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவன் தவறி விழுந்து காயமடைந்த நிலையில், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் உடனடி தலையீட்டினால் மீண்டும் பரீட்சைக்குத் தோற்றிய சம்பவம் ஒன்று பொரலஸ்கமுவ பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

பொகுந்தர மஹிந்த ஜூனியர் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவன் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பொரலஸ்கமுவ மகா வித்தியாலயத்தின் பரீட்சை மண்டபத்திற்கு வந்துள்ளார்.

பரீட்சையின் முதல் பகுதிக்கான விடைகளை எழுதி முடித்துவிட்டு மலசலகூடத்துக்கு சென்றபோது கால் தடுமாறி விழுந்துள்ளார்.

கால் இடறி விழுந்து தலையில் காயம் ஏற்பட்டதால் மாணவன் பயந்து அழுதுள்ளான். அப்போது, பாதுகாப்பு கடமைகளுக்காக பிரசன்னமாகியிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் சிறுவனை சமாதானப்படுத்தி, பரீட்சை மண்டப அதிபருக்கு அறிவித்து, அவரது அனுமதியுடன், காயமடைந்த குழந்தையை கொத்தலாவல பாதுகாப்பு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

இந்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ளதால் சிறுவனுக்கு உடனடியாக சிகிச்சை வழங்குமாறு பொலிஸ் அதிகாரி கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த கோரிக்கையை ஏற்ற வைத்தியர்கள் குழந்தைக்கு உடனடியாக சிகிச்சை அளித்தனர். அதன்படி, பொலிஸ் உத்தியோகத்தர் குழந்தையை மீண்டும் பரீட்சை அறைக்கு அழைத்து வந்தார்.

அப்போது, பரீட்சை மண்டப அதிபர், பொறுப்பான இடங்களுக்கு தொலைபேசியில் அறிவித்து, காயமடைந்த சிறுவனுக்கு கூடுதல் நேரத்தைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# பெரும்போகச் செய்கைக்கு முன்பே விவசாயிகளுக்கு தேவையான உரம்

## அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

பெரும்போக பயிர்செய்கையை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே விவசாயிகளுக்கு தேவையான உரங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

பெரும்போகத்திற்கான வழிபாடுகளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாய அமைப்புகள் அனைத்தையும் சந்தித்து நான் கலந்துரையாடியுள்ளேன்.

உரங்கள் மற்றும் எரிபொருட்கள் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறுமா என்பது விவசாயிகளுக்கு இருக்கும் பிரதான பிரச்னைகளாக காணப்படுகின்றது.

கடந்த போகத்திலும் அவர்கள் வைத்த நம்பிக்கையை நாங்கள் உறுதிப்படுத்தினோம்.

மூன்று வகையான உரங்களையும் விவசாயிகளுக்கு வழங்கியதன் ஊடாக வெற்றிகரமான அறுவடையை பெற முடிந்தது.

இம்முறையும் பயிர்செய்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே அதற்கு தேவையான உரங்களை அனுப்பி விவசாயிகளிடம் நம்பிக்கையை ஏற்படுத்தி இந்த போகத்தையும் வெற்றியுடன் முன்னெடுக்கவே எதிர்பார்க்கின்றோம்.

சென்றமுறை 800 மெற்றிக் தொன் அரிசி நாட்டுக்கு கொண்டு வர நேர்ந்தது.

என்றாலும் கடந்த பெரும்போக மற்றும் சிறுபோக பயிர்செய்கையை வெற்றிகரமாக முன்னெடுத்ததன் காரணமாக வெள்ளத்தினால் பாதிப்புகள் ஏற்பட்டாலும் நாட்டு மக்களுக்கு தேவையான போதியளவு அரிசி காணப்படுகின்றது.

அரிசி இறக்குமதி செய்யுமாறு பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. ஆனாலும் அவற்றை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

மக்களின் நுகர்வுக்கு தேவையான அளவு அரிசி நாட்டில் காணப்படுகின்றது-என்றார்.

# தேர்தலை பிற்போட முயற்சித்தால் ஜனாதிபதிக்கு எதிராக நடவடிக்கை

## எதிர்க்கட்சிகள் இணைந்து தீர்மானம்

கொழும்பு, ஒக். 17

புதிய தேர்தல் முறைமை ஒன்று கொண்டு வரப்படும் என்று கூறி ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சித்தால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அனைத்து எதிர்க்கட்சிகளும் தீர்மானித்துள்ளன.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கிவிட்டு புதிய தேர்தல் முறை கொண்டுவரப்படும் என்று கூறி ஜனாதிபதி தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒத்திவைக்க முயற்சித்தால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க அனைத்து எதிர்க்கட்சிகளும் தீர்மானித்துள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, உத்தர லங்கா சஹாபய, சுதந்திர மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் மற்றும் குழுக்கள் ஒன்றிணைந்து செயற்பட தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலை அடுத்த ஆண்டு ஒக்டோபர் மாதத்துக்கு முன்னரும், பொதுத் தேர்தலை 2025 ஆகஸ்ட் மாதத்துக்கு முன்னும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது,

திட்டமிட்டபடி தேர்தல் நடத்தப்படாவிட்டால், வாக்களிக்கும் உரிமையை பாதுகாக்கும் வகையில் சட்டத்தின் ஊடாக செயற்பட குறித்த கட்சிகளும் குழுக்களும் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

இறுதி முயற்சியாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கவும் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கவும் அரசாங்கத் முயற்சிப்பதாக எதிர்கட்சிகள் குற்றம்சாட்டுகின்றன.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கிவிட்டு புதிய தேர்தல் முறைமை கொண்டு வரப்படும் என கூறுவதன் மூலம் அரசாங்கம் உண்மையில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்கவோ அல்லது புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்தவோ முயற்சிக்கவில்லை என்றும் மாறாக ஒத்திவைப்பதற்கு தேவையான பின்னணியை உருவாக்கவே முயற்சிக்கின்றது என்றும் எதிர்க்கட்சிகள் தெரிவிக்கின்றன.

அரசாங்கம் தன்னிச்சையாக தேர்தலை பிற்போட்டால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அனைத்து எதிர்க்கட்சிகளும் தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

(அ)

# காஸா விவகாரத்தில் இலங்கை நடுநிலையாக இருக்கவேண்டும்

## எதிர்க்கட்சி வேண்டுகோள்

கொழும்பு, ஒக். 17

இஸ்ரேல் - காஸா மோதலில் இலங்கை நடுநிலையான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இலங்கை நடுநிலையானது எமது இலக்குகளை அடைய உதவும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன, இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

“காஸா பகுதியில் மோதில் ஈடுபட்டுவரும் எந்தவொரு தரப்பினரையும் இலங்கை ஆதரிக்கக்கூடாது.

இலங்கை எடுக்கும் நிலைப்பாடுகளால் ஏற்படும் பாதகமான விளைவுகள் குறைப்பதாக எமது தீர்மானங்கள் இருப்பதை உறுதி செய்யவேண்டும்.

குறிப்பாக பொருளாதாரம் தொடர்பில் இலங்கை தனது சொந்த நிகழ்ச்சி நிரலில் கவனம் செலுத்த வேண்டும்“ என பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன மேலும் தெரிவித்தார்.

# புல்மோட்டை உள்ள வறிய மாணவர்களுக்கு ஒன்றரை மில்லியன் செலவில் சைக்கிள்கள்!

திருமலை, ஒக். 17

**சர்வதேச மனித நேய அமைப்பான முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் முன் மாதிரிக் கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பாடசாலைக் கல்வி மேம்பாடுத்தும் நோக்குடன் புல்மோட்டை சதாம் முஸ்லிம் வித்தியாலயம், ஜின்னாபுரம் கலவன் பாடசாலை மற்றும் புல்மோட்டை மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் மாணவர்களுக்கான 25 சைக்கிள்கள் கையளிக்கும் நிகழ்வு பாடசாலை வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றன.**

புல்மோட்டை சதாம் வித்தியாலத்தில் நடைபெற்ற நிகழ்வில் குச்சவெளி உதவி பிரதேச செயலாளர்

திருமதி பி. மோஹனமுரளி, புல்மோட்டை போலீஸ் நிலைய பொறுப்பதிகாரி விஜயக்கோன், பாடசாலை அதிபர்கள், முஸ்லீம் எயிட் செயற்திட்ட முகாமையாளர் பாஸ்லான் தாசிம், முஸ்லிம் எயிட் நிறுவான ஊழியர்கள், மாணர்வர்கள் மற்றும் பெற்றோர் கலந்து சிறப்பித்தனர்.

கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் சிக்கியிருக்கும், வறிய, பின்தங்கிய குடும்பங்களிலுள்ள கல்வி கற்கின்ற தூர பிரதேசங்களில் இருந்து வருகின்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக



வழங்கப்பட்டது. முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் உதவிகளை பாடசாலை அதிபர்கள், சமூகத்தினரும் வரவேற்று நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர். (அ)

# இராமகிருஷ்ண மிஷன் மடத்தில் நவராத்திரி விழா



காரைதீவு, ஒக். 17

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரமத்தில் நவராத்திரி விழா கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சிறீ துர்க்கா தேவியின் வழிபாடுகள் நேற்று முன்தினம் முதல் ஆச்சிரம பொது முகாமையாளர் சிறீ மத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

கொலு பொம்மைகள் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இத்துடன் சப்தமி தினத்து அன்று அபிராமி அந்தாதி பாராயணம் நடைபெற உள்ளது. அஷ்டமி தினமாகிய ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் விசேட பூசைகள் நடைபெறும். அன்று மாலை நலங்களை சேர்க்கும் திருவிளக்குப் பூசை நடைபெற உள்ளது. நவமி தினமாகிய திங்கட்கிழமை மாலை லலிதா சகஸ்ரநாம பாராயணம் நடைபெறும், வழமை போல தசமி தினத்தன்று மாணவர்களுக்கு ஏடு தொடக்கும் வைபவம் நடைபெறும். (அ)

# சிறப்பாக இடம்பெற்ற சம்மாந்துறை பத்திரகாளியம்மன் ஆலய தீ மிதிப்பு

காரைதீவு, ஒக். 17

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை தமிழ் குறிச்சி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலய தீமிதிப்பு மற்றும் வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற

தொடர்ச்சியாக 10 நாட்கள் திருவிழாக்கள் இடம் பெற்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி அளவில் ஆலயத்திற்கு சொந்தமான மாவடி வளவில் மஞ்சள் குளித்து பின்பு ஊர்வலமாக ஆலயத்துக்கு வந்து தீமிதிப்பு இடம் பெற்றது என்று ஆலய பரிபாலன சபைத்தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

ஆலய பிரதம குரு கு. லோகேஷ் கிரியைகளை



பகல் 12 மணிக்கும் மாலை 6:00 மணிக்கும் தினமும் நடத்திவந்தார். (அ)

# முருங்கைக்காய் பறித்தபோது மின் தாக்கி இரண்டு பிள்ளைகளின் தாயார் உயிரிழப்பு

## களுவாஞ்சிக்குடியில் துயரச் சம்பவம்

மட்டக்களப்பு, ஒக். 17

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் குடும்பப் பெண் ஒருவர் முருங்கை மரத்தில் முருங்கைக்காய் பறித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த சம்பவம் நேற்று முன் தினம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குமாரதம்பிரான் வீதி 8ம் வட்டாரம் களுவாஞ்சிகுடி பிரதேசத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின தாயாரான அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை புரியும் நவநீதன் சசிகலா (வயது-51) என்பவரே இவ்விபத்தில் உயிரிழந்தவராவார்.

சம்பவ தினத்தன்று சமையலுக்காக தனது வீட்டின் வீதியோரத்தின் அருகில் உள்ள முருங்கைமரத்தில் முருங்கைக்காய் பறிக்க முற்பட்டபோது அதனூடக சென்று கொண்டிருந்த மின்சாரக் கம்பியில் முருங்கைக்காய் பறித்த இரும்புக் கம்பி தட்டுப்பட்டதனால் குறித்த பெண் மின்சாரம் தாக்கிய நிலையில் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

குறித்த பெண்ணை அவரின் மகள் காப்பற்றச் சென்றபோது அவருக்கும் மின்சாரம் தாக்கி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிகுடி நீதிமன்ற நீதிவான் ஜே.வி.ஏ.ரஞ்சித்குமார் அவர்களின் உத்தரவிற்கு அமைவாக சம்பவ இடத்திற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்ட பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தும்படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார்.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (அ)

# கனமழையால் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கின!

திருமலை, ஒக். 17

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று முன் தினம் இரவு பெய்த கனமழை காரணமாக தம்பலகாமம், கிண்ணியா போன்ற பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

தற்போது வயல் விதைப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ள நிலையில் பலத்த மழை காரணமாக முற்றாக வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

கிண்ணியா சூரங்கல் கற்குழி



உள்ளிட்ட வயல் நிலப்பகுதிகள் மற்றும் தம்பலகாமம் கோயிலடி உள்ளிட்ட பல வயல் நிலங்கள் மூழ்கியுள்ளன.

இதனால் விவசாயிகள் வயலை உழுது விதைப்பினை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். (அ)

# கிண்ணியா விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கல்

திருமலை, ஒக். 17

முஸ்லிம் எய்ட் கிண்ணியா பிரதேசத்தில் முன்னெடுத்து வரும் விவசாய வாழ்வாதர திட்டத்தில் ஒரு பகுதியாக பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகள் மற்றும் பழ மர கன்றுகள் வழங்கும் நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம் கனி தலைமையின் கீழ் செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் மஜீத் நகர், நடுவூத்து ,மஹரு கிராம பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட பயிர்ச்செய்கை விவசாயிகளுக்கு பிரதேச செயலாளர் எம்.எச்.எம்



கனி வழங்கப்பட்டது.

இதில் பிரதேச செயலக அரச சார்பற்ற நிறுவன ஒருங்கிணைப்பாளர் கே.பாஜில், முஸ்லிம் எய்ட் அதிகாரி எஸ்.எம்.ரிபாய், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இம்மாதம் சுமார் 14 மில்லியன் பெறுமதியான விவசாய உள்ளீடுகள் 35 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# காஸாவுக்கு குடிதண்ணீரை வழங்க இஸ்ரேல் இணக்கம்

## உலகநாடுகளின் எதிர்ப்பை அடுத்து

ஜெருசலேம், ஒக். 17

**காஸா பகுதிக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்ய இஸ்ரேல் ஒப்புதல் அளித்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**இந்த நேரத்தில் வெளிநாட்டவர்கள் காஸாவை விட்டு வெளியேறவும் நிவாரணப் பொருட்கள் சிலவற்றை ரபாஹ் எல்லை மூலம் கொண்டு வரவும் அனுமதி வழங்கப்படவுள்ளது.**



உலக நாடுகளின் இஸ்ரேலின் அட்டூழியத்துக்கு எதிரான பொதுமக்களின் எதிர்ப்பை தொடர்ந்தே இப்படி ஒரு நிலை உருவாகியுள்ளது.

அமெரிக்கா - இஸ்ரேல் இடையே நடந்த பேச்சுவார்த்தையில் இஸ்ரேல் பிரதமர் இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காஸாவில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,300 ஐ தாண்டியுள்ளதாக அங்குள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மொத்தத்தில், 2,329 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் 9,714 பேர் காயமடைந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தாக்குதல் ஆரம்பமாகி ஒரு வாரத்திற்கு மேல் ஆகிறது. இதில் இஸ்ரேலில் இதுவரை 1,300 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

அதற்குப் பதிலடியாக அன்றிலிருந்து காஸாவில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகிறது, மேலும் தரைவழித் தாக்குதல் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், காஸா பொதுப்பணி அமைச்சு வழங்கியுள்ள தகவலின்படி, இஸ்ரேல் தாக்குதலில் 1,324 கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன.

இந்த கட்டடங்களில் இருந்த 5,405 வீடுகள் இடிந்து விழுந்தன. மேலும் 3,743 வீடுகள் சீரமைக்க முடியாத மற்றும் வசிக்க முடியாக அளவுக்கு சேதமடைந்துள்ளன. இதுதவிர 55,000 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. (அ)

# இளம் வயதில் உயிரிழந்த அழகி!



மொன்ரிவீடியோ, ஒக். 17


உருகுவே நாட்டைச் சேர்ந்த முன்னாள் உலக அழகிப் போட்டியாளரான ‘ஷெரிகா டி அர்மாஸ்‘ கடந்த 13 ஆம் திகதி தனது 26 வயதில் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவர் கடந்த 2015ஆம் ஆண்டில் உலக அழகி போட்டியாளராக கலந்து கொண்டிருந்தார். இந்நிலையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அதற்கு சிகிச்சை பெற்றுவந்த அவர், சிகிச்சை பலனின்றி மரணம் அடைந்துள்ளார்.

அவருடைய மரணம் உருகுவே உட்பட உலக நாடுகள் முழுவதும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை அவருடைய மறைவுக்கு உருகுவேவின் மிஸ் யூனிவர்ஸ் அழகியான கர்லா ரொமிரோ, “என்னுடைய வாழ்வில் நான் சந்தித்தவர்களில் மிக அழகிய பெண்களில் ஒருவர் ஷெரிகா” எனத் தெரிவித்துள்ளார். (அ)

# மீண்டும் இஸ்ரேலுக்கு செல்கிறார் பிளிங்கன்



நியூயோர்க், ஒக். 17

மத்திய கிழக்கின் ஆறு நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் மீண்டும் இஸ்ரேலுக்கு செல்லவுள்ளார்.

குறித்த விஜயத்தின் போது அன்டனி பிளிங்கன், மற்ற மூத்த இஸ்ரேலிய அதிகாரிகள் மற்றும் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை மீண்டும் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அத்தோடு இஸ்ரேலின் அவசரகால அரசாங்கத்தில் பங்கேற்பதற்கு மறுப்பு தெரி வித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் யார் லாபிடுடனும் அவர்கலந்துரையாடுவார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)



# நெத்தன்யாகு, அப்பாஸ்டன் தொலைபேசியில் பேசிய பிடன்

நியூயோர்க், ஒக். 17

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு மற்றும் பாலஸ்தீன அதிகாரசபையின் தலைவர் மஹ்மூத் அப்பாஸ் ஆகியோருடன் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் கடந்த சனிக்கிழமை தனித்தனியாக தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டதாக இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன தலைவர்களின் அலுவலகங்களின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

காசாவின் ஹமாஸ் ஆட்சியாளர்களுக்கு எதிரான இஸ்ரேலின் போர் இலக்குகளை அடைய “ஒற்றுமை மற்றும் உறுதிப்பாடு” தேவை என்று நெத்தன்யாகு பிடனிடம் கூறினார், அமெரிக்காவின் ஆதரவுக்கு அவர் நன்றி தெரிவித்தார் என நெத்தன்யாகுவின் அலுவலகம் கூறியது.

காசாவில் இருந்து பலஸ்தீனியர்கள் இடம்பெயர்வதை முற்றிலுமாக நிராகரிப்பதாக பலஸ்தீனத் தலைவர் பிடனிடம் கூறியதாக அப்பாஸின் அலுவலகம் கூறியது.

அமெரிக்க அதிகாரி ஒருவர் இரண்டு அழைப்புகளை உறுதிப்படுத்தினார்.

நெத்தன்யாகுவுடனான அழைப்பில் இஸ்ரேலுக்கான அமெரிக்காவின் அசைக்க முடியாத ஆதரவை பிடன் மீண்டும் வலியுறுத்தினார் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

“அப்பாவி குடிமக்களுக்கு தண்ணீர், உணவு மற்றும் மருத்துவ வசதி கிடைப்பதை உறுதி செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபை, எகிப்து, ஜோர்தான், இஸ்ரேல் மற்றும் பிராந்தியத்தில் உள்ள மற்றவர்களுடன் அமெரிக்க ஒருங்கிணைப்பு குறித்து பிரதமர் நெதத்ன்யாகுவுடன் ஜனாதிபதி பிடன் விவாதித்தார்” என்று வெள்ளை மாளிகை ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

“பொதுமக்களை பாதுகாப்பதற்கான அனைத்து முயற்சிகளுக்கும் ஜனாதிபதி பிடன் தனது ஆதரவை உறுதிப்படுத்தினார்.” என்றும் அது கூறியது. (அ)

# லெபனானில் இஸ்ரேல் தாக்குதல் ரொய்ட்டர் செய்தியாளர் மரணம்

## ஆயிரக்கணக்கானோர் அவர் உடலுக்கு அஞ்சலி

பெய்ரூட், ஒக். 17

ரொய்ட்டர் சர்வதேச செய்தி நிறுவனத்துக்காக லெபனானில் இருந்து செயற்பட்ட செய்தியாளர் இஸ்ஸாம் அப்துல்லா இஸ்ரேல் படைகளது குண்டு வீச்சில் சிக்கி உயிரிழந்தார். அல்-ஜசீரா, ஏ.எவ்.பி நிறுவனங்களைச் சேர்ந்த வேறு சில செய்தியாளர்கள், படப்பிடிப்பாளர்கள் உட்பட ஆறு பேர் காயமடைந்தனர்.

அவர்கள் பயணம் செய்த வாகனம் செய்தியாளர்களுடையது என்று தெளிவாக அடையாளப்படுத்தப் பட்டிருந்த நிலையிலும் இஸ்ரேல் படைகளின் நேரடியான ரொக்கெற் வீச்சுக்கு இலக்கானதாகச் சொல்லப்படுகிறது.

லெபனானின் தென் பகுதியில் இஸ்ரேல் எல்லையோரம் இந்தத் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. அதில் செய்தியாளர் சிக்க நேர்ந்தமைக்காக இஸ்ரேலிய இராணுவம் வருத்தம் தெரிவித்திருக்கிறது.

குண்டு வீச்சுக்கள் ஆரம்பித்தது முதல் அங்குள்ள நிலைவரங்களை அறிவதற்காக ரொய்ட்டர் நிறுவனத்தினால் தெற்கு லெபனானுக்கு அனுப்பப்பட்ட அணி ஒன்றில் இஸ்ஸாம் அப்துல்லா வீடியோப் படப்பிடிப்பாளராக இணைந்திருந்தார். அவர் கொல்லப்பட்டி ருப்பது ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தியிருப்பதாக ரொய்ட்டர் நிறுவனம் ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.



லெபனானில் நடந்த இறுதி நிகழ்வில் இஸ்ஸாம் அப்துல்லாவின் உடலுக்கு ஆயிரக்கணக்கான பொது மக்களும் பத்திரிகையாளர்களும் திரண்டு அஞ்சலி செலுத்திய காட்சிகளை ரொய்ட்டர் வெளியிட்டிருக்கிறது.

இஸ்ரேல் - ஹமாஸ் இயக்க மோதல் ஆரம்பித்தது முதல் ஏழு நாட்களில் 12 ஊடகவியலாளர்கள் அந்தப் பிராந்தியத்தில் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ள “பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கின்ற சர்வதேசக் குழு”

“பத்திரிகையாளர்கள் சிவிலியன்கள். அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்” என்பதை வலியுறுத்தி உள்ளது.

இதேவேளை - இஸ்ரேல் படையினர் காஸாப் பகுதியை முழுமையாகக் கைப்பற்றுவதற்கான பெரும் போருக்கு கடல் -தரை-ஆகாய மார்க்கமாகத் தயாராகி வருகின்ற நிலையில் கட்டாய இடப்பெயர்வு காரணமாக காஸாவில் பெரும் மனிதப் பேரவலம் தோன்றியுள்ளது.

காஸாவில் வடக்கு எல்லையில் வசிக்கின்ற சுமார் 11 லட்சம் சிவிலியன்களையும் தெற்கு நோக்கி நகர்வதற்கு இஸ்ரேல் விதித்திருந்த கால அவகாசம் முடிவடைந்த நிலையில் இன்னமும் அங்கு தங்கியிருப்போர் மிக இயன்றளவு விரைவாக வெளியேறிவிடுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்து செல்லும் மக்களது வாகன அணிகளால் வடக்கில் இருந்து தெற்கே செல்லும் நெடுஞ்சாலையில் பெரும் சன நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அந்த வீதியில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பதை அங்குள்ள சர்வதேச செய்தியாளர்கள் உறுதிப்படுத்தி உள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதி முதல் காஸா மீது இஸ்ரேல் நடத்திவருகின்ற குண்டுத் தாக்குதல்களில் இதுவரை 2,329 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று பலஸ்தீனிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# புல்மோட்டை உள்ள வறிய மாணவர்களுக்கு ஒன்றரை மில்லியன் செலவில் சைக்கிள்கள்!

திருமலை, ஒக். 17

**சர்வதேச மனித நேய அமைப்பான முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் முன் மாதிரிக் கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பாடசாலைக் கல்வி மேம்பாடுத்தும் நோக்குடன் புல்மோட்டை சதாம் முஸ்லிம் வித்தியாலயம், ஜின்னாபுரம் கலவன் பாடசாலை மற்றும் புல்மோட்டை மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் மாணவர்களுக்கான 25 சைக்கிள்கள் கையளிக்கும் நிகழ்வு பாடசாலை வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றன.**

புல்மோட்டை சதாம் வித்தியாலத்தில் நடைபெற்ற நிகழ்வில் குச்சவெளி உதவி பிரதேச செயலாளர்

திருமதி பி. மோஹனமுரளி, புல்மோட்டை போலீஸ் நிலைய பொறுப்பதிகாரி விஜயக்கோன், பாடசாலை அதிபர்கள், முஸ்லீம் எயிட் செயற்திட்ட முகாமையாளர் பாஸ்லான் தாசிம், முஸ்லிம் எயிட் நிறுவான ஊழியர்கள், மாணர்வர்கள் மற்றும் பெற்றோர் கலந்து சிறப்பித்தனர்.

கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் சிக்கியிருக்கும், வறிய, பின்தங்கிய குடும்பங்களிலுள்ள கல்வி கற்கின்ற தூர பிரதேசங்களில் இருந்து வருகின்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக



வழங்கப்பட்டது. முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் உதவிகளை பாடசாலை அதிபர்கள், சமூகத்தினரும் வரவேற்று நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

(அ)

# இராமகிருஷ்ண மிஷன் மடத்தில் நவராத்திரி விழா



காரைதீவு, ஒக். 17

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரமத்தில் நவராத்திரி விழா கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சிறீ துர்க்கா தேவியின் வழிபாடுகள் நேற்று முன்தினம் முதல் ஆச்சிரம பொது முகாமையாளர் சிறீ மத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

கொலு பொம்மைகள் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இத்துடன் சப்தமி தினத்து அன்று அபிராமி அந்தாதி பாராயணம் நடைபெற உள்ளது. அஷ்டமி தினமாகிய ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் விசேட பூசைகள் நடைபெறும். அன்று மாலை நலங்களை சேர்க்கும் திருவிளக்குப் பூசை நடைபெற உள்ளது. நவமி தினமாகிய திங்கட்கிழமை மாலை லலிதா சகஸ்ரநாம பாராயணம் நடைபெறும், வழமை போல தசமி தினத்தன்று மாணவர்களுக்கு ஏடு தொடக்கும் வைபவம் நடைபெறும்.

(அ)

# சிறப்பாக இடம்பெற்ற சம்மாந்துறை பத்திரகாளியம்மன் ஆலய தீ மிதிப்பு

காரைதீவு, ஒக். 17

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை தமிழ் குறிச்சி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலய தீமிதிப்பு மற்றும் வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற

தொடர்ச்சியாக 10 நாட்கள் திருவிழாக்கள் இடம் பெற்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி அளவில் ஆலயத்திற்கு சொந்தமான மாவடி வளவில் மஞ்சள் குளித்து பின்பு ஊர்வலமாக ஆலயத்துக்கு வந்து தீமிதிப்பு இடம் பெற்றது என்று ஆலய பரிபாலன சபைத்தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

ஆலய பிரதம குரு கு. லோகேஷ் கிரியைகளை



பகல் 12 மணிக்கும் மாலை 6:00 மணிக்கும் தினமும் நடத்திவந்தார். (அ)

# முருங்கைக்காய் பறித்தபோது மின் தாக்கி இரண்டு பிள்ளைகளின் தாயார் உயிரிழப்பு

## களுவாஞ்சிக்குடியில் துயரச் சம்பவம்

மட்டக்களப்பு, ஒக். 17

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் குடும்பப் பெண் ஒருவர் முருங்கை மரத்தில் முருங்கைக்காய் பறித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த சம்பவம் நேற்று முன் தினம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குமாரதம்பிரான் வீதி 8ம் வட்டாரம் களுவாஞ்சிகுடி பிரதேசத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின தாயாரான அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை புரியும் நவநீதன் சசிகலா (வயது-51) என்பவரே இவ்விபத்தில் உயிரிழந்தவராவார்.

சம்பவ தினத்தன்று சமையலுக்காக தனது வீட்டின் வீதியோரத்தின் அருகில் உள்ள முருங்கைமரத்தில் முருங்கைக்காய் பறிக்க முற்பட்டபோது அதனூடக சென்று கொண்டிருந்த மின்சாரக் கம்பியில் முருங்கைக்காய் பறித்த இரும்புக் கம்பி தட்டுப்பட்டதனால் குறித்த பெண் மின்சாரம் தாக்கிய நிலையில் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

குறித்த பெண்ணை அவரின் மகள் காப்பற்றச் சென்றபோது அவருக்கும் மின்சாரம் தாக்கி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிகுடி நீதிமன்ற நீதிவான் ஜே.வி.ஏ.ரஞ்சித்குமார் அவர்களின் உத்தரவிற்கு அமைவாக சம்பவ இடத்திற்கு மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்ட பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தும்படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார்.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (அ)

# கனமழையால் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கின!

திருமலை, ஒக். 17

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று முன் தினம் இரவு பெய்த கனமழை காரணமாக தம்பலகாமம், கிண்ணியா போன்ற பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

தற்போது வயல் விதைப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ள நிலையில் பலத்த மழை காரணமாக முற்றாக வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

கிண்ணியா சூரங்கல் கற்குழி



உள்ளிட்ட வயல் நிலப்பகுதிகள் மற்றும் தம்பலகாமம் கோயிலடி உள்ளிட்ட பல வயல் நிலங்கள் மூழ்கியுள்ளன.

இதனால் விவசாயிகள் வயலை உழுது விதைப்பினை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

(அ)

# கிண்ணியா விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கல்

திருமலை, ஒக். 17

முஸ்லிம் எய்ட் கிண்ணியா பிரதேசத்தில் முன்னெடுத்து வரும் விவசாய வாழ்வாதர திட்டத்தில் ஒரு பகுதியாக பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகள் மற்றும் பழ மர கன்றுகள் வழங்கும் நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம் கனி தலைமையின் கீழ் செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் மஜீத் நகர், நடுவூத்து ,மஹரு கிராம பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட பயிர்ச்செய்கை விவசாயிகளுக்கு பிரதேச செயலாளர் எம்.எச்.எம்



கனி வழங்கப்பட்டது.

இதில் பிரதேச செயலக அரச சார்பற்ற நிறுவன ஒருங்கிணைப்பாளர் கே.பாஜில், முஸ்லிம் எய்ட் அதிகாரி எஸ்.எம்.ரிபாய், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இம்மாதம் சுமார் 14 மில்லியன் பெறுமதியான விவசாய உள்ளீடுகள் 35 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஜனாதிபதித்...

இரண்டு பிரதான கட்சிகளுக்கிடையே போட்டி நிலவும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இஸ்ரேல் - பலஸ்தீனம் மோதல் தொடர்பில் கொழும்பில் உள்ள பலஸ்தீனத்துக்கான தூதுவரை நேற்று திங்கட்கிழமை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கேள்வி - ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்படுகிறதே ?

பதில் - அரசியலமைப்பின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நிச்சயம் இடம்பெறும்.

கேள்வி - புதிய அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றுள்ளமை பற்றி உங்களின் நிலைப்பாடு என்ன ?

பதில் - தேர்தல் ஒன்று இடம்பெறும் காலத்தில் புதிதாக அரசியல் கட்சிகள் தோற்றம் பெறுவது இயல்பானதே. ஆனால் தேர்தலில் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுக்கு இடையில் தான் போட்டி இருக்கும்.

கேள்வி -பொதுஜன பெரமுன தேர்தலுக்கு தயாரா ?

பதில் - நாங்கள் தேர்தலுக்கு என்றும் தயாராக உள்ளோம். வெகுவிரைவில் தேர்தலை நடத்த வேண்டும் என்பதற்கான நகர்வுகளை தற்போது முன்னெடுத்துள்ளோம்.

கேள்வி - எவரது தலைமைத்துவத்துடன் பொதுஜன பெரமுன தேர்தலில் போட்டியிடும் ?

பதில் - எனது தலைமைத்துவத்துடன் பொதுஜன பெரமுன பலமான முறையில் எதிர்வரும் தேசிய தேர்தல்களில் போட்டியிடும்.

கேள்வி- பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இல்லை என்று மக்கள் விடுதலை முன்னணியினர் குற்றஞ்சாட்டுகின்றனரே ?

பதில் - மக்கள் விடுதலை முன்னணியினர் குற்றஞ்சாட்டுவது ஒன்றும் புதிய விடயமல்ல, அவர்களின் குற்றச்சாட்டுக்கு முரணாகவே வாக்குகள் காணப்படுகிறது. ஆகவே அவர்களின் குற்றச்சாட்டுகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டிய தேவையில்லை- என்றார். (அ)

## ஜே. வி. பி....

நேற்று முன்தினம் நாவலபிட்டி நகரில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் விடுதலை முன்னணி மக்களின் அடையாள அட்டையை பறித்து, தங்க ஆபகரணங்களைக் கொள்ளையடித்து கழுத்தை வெட்டியது.

அனைத்தையும் செய்தது மக்கள் விடுதலை முன்னணி. ஆனால் அவர்கள் மக்களுக்கு எந்த ஒரு வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்ததில்லை.

இன்று அவர்களுடைய கட்சியை திசைகாட்டியென்று பெயர் சூட்டி கொண்டுள்ளார்கள். 2019ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டு புதிய ஜனாதிபதி ஊடாக புதிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கின்றோம்.

கோட்டபாயவுக்கு 69 இலட்சம் பேர் வாக்களித்தனர்.

ஆனால், தற்போது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக செயல்பட்டு கொண்டிருக்கிறார்.

கோட்டபாயவுக்கு வாக்களித்த நாம் எதிர்வரும் காலங்களில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கவேண்டும்.

2019ஆம் ஆண்டு ஒன்பது மாதங்கள் கடந்த பின் கொரோனா தொற்று மற்றும் பொருளாதார ரீதியாக நாம் பாதிப்படைந்தோம்.

முன்னய காலத்தை விட தற்போது மின்சாரம், எரிவாயு, எரிபொருள் அனைத்தும் காணப்படுகிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைவடைந்து மக்கள் இன்று வாழக்கூடிய நிலையில் இருக்கின்றோம்.

சீனா உள்ளிட்ட ஏனைய நாடுகளும் எமக்கு உதவி செய்வதற்கு முன்வந்துள்ளன.

அது மட்டுமல்ல அதற்கான ஒப்பந்தங்களும் கைச்சாத்திட உள்ளன- என்றார். (அ)

## இஸ்ரேல்...

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலகில் இடம்பெற்றுவரும் ரஷ்யா மற்றும் உக்ரைன் மோதல், இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் குழுவினருக்கிடையில் இடம்பெற்றுவரும் மோதல் காரணமாக உலக பொருளாதாரத்துக்கு என்ன நடக்கும் என்ற நச்சயமற்ற நிலை உலக நாடுகளுக்குள்ளேயே இருந்து வருகிறது.

இவ்வாறான நிலையில் பொருளாதா ரீதியில் வீழச்சியடைந்திருக்கும் எமக்கு மிகவும் சவால்மிக்க பல விடயங்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும். இவ்வாறான நிலையில் அரசாங்கம் என்றவகையில் நாங்கள் இந்த மோதல்களின் போது எந்த பக்கமும் இல்லாமல் மோதலை நிறுத்தி சமாதானப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கிறோம்.

அத்துடன் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் குழுவினருக்கிடையில் இடம்பெற்று வரும் மோதலை சிலர் இனவாதமாக எடுத்துக்கொண்டு ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்கின்றனர்.

இந்த மோதலால் ஏற்படுகின்ற உலக பொருளாதார பாதிப்பால் இலங்கைக்கும் அதன் தாக்கம் ஏற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே சிலர் இருக்கின்றனர். இதன் மூலம் எப்படியாவது அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்றே நினைக்கின்றனர். அரசியல் அறிவீனமே இதற்கு காரணமாகும்.

அத்துடன் இஸ்ரேல் ஹமாஸ் மோதலால் எரிபொருளுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதை அறிந்துகொண்டு தேவையான எரிபொருட்களை களஞ்சியப்படுத்தி வைக்குமாறு ஜனாதிபதி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவுக்கு தெரிவித்திருக்கிறார்.

அதேபோன்று இந்த மோதலில் நாங்கள் யார் பக்கமும் சாராமல் எப்படியாவது இதனை சமாதானப்படுத்தி முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே இருக்கிறேம்.

மோதல் தொடர்ந்தால் அதன் பாதிப்பு உலக பொருளாதாரத்துக்கு பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தும். அதனால்தான் ஜனாதிபதி வல்லரச நாடுகளின் தலைவர்களுக்கு இந்த மோதலை விரைவாக முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவிப்பு செய்திருக்கிறார்.

அத்துடன் இஸ்ரேலில் எமது நாட்டைச்சேர்ந்த சுமார் 8ஆயிரம் பேர்வரை இருக்கின்றனர். அதேபோன்று காசாவில் சில குடும்பங்கள் இருக்கின்றன.

அதனால் அந்த மக்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருகிறோம். அவர்கள் நாட்டுக்கு வர விரும்பினால், அதற்கு தேவையான ஏற்பாடுகளையும் நாங்கள் செய்திருக்கிறோம் - என்றார். (அ)

# பலஸ்தீன மக்கள் பக்கமே நாம் என்றும் நிற்கின்றோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கொழும்பு, ஒக். 17

பலஸ்தீன மக்களின் விடியலுக்காக இலங்கை மக்களோடு தாமும் என்றும் முன்நிற்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள பலஸ்தீன தூதரகத்தில் தூதுவர் கலாநிதி ஸுஹைர் எம்.எச்.டார் செயிட் நேற்று சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகின் கடைசி ஆக்கிரமிப்பு நாடான பலஸ்தீன தேசத்தினதும் மக்களினதும் விடியலுக்கான தீர்வாக ஐக்கிய நாடுகள் சபை இறுதியாக நிறைவேற்றிய தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், சர்வதேச சட்டங்கள்,சர்வதேச சமவாயங்கள், மனித உரிமை பிரகடனங்களை நடைமுறைப்படுத்த சர்வதேசம் அர்ப்பணிப்புடன் தலையிட வேண்டும் என்றும், இவ்விவகாரத்தில் சில நாடுகளின் ஒரு தலைபட்ச போக்குக்கு இடமளிக்க முடியாது என்றும், அமைதி, ஒற்றுமையை நிலைநாட்ட சர்வதேசம் கூடிய கரிசனையோடு செயற்பட உலக தலைவர்கள் முன்வர வேண்டும் என்றும் தூதுவருடனான சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாலஸ்தீன மக்களுடன் ஒட்டுமொத்த இலங்கை மக்களும் ஒன்றுபட்டு நிற்பார்கள் என்றும்,ஜனநாயக ரீதியிலான தீர்விலேயே விடியலை எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பேச்சு மேசைக்கு வந்து சகோதரத்துவத்துடனும், நல்லிணக்கத்துடனும், ஒற்றுமையுடனும் இப்பிரச்னையை தீர்க்க உலக தலைவர்கள் வரலாற்றை ஆய்ந்து சரியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் இங்கு எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

1948 அரபு-இஸ்ரேல் போர் மற்றும் அதைத் தொடர்ந்த மோதல்களுக்குப் பிறகு அதிலிருந்து இன்று வரை பாலஸ்தீன மக்களின் ஜனநாயக உரிமைகள் அங்கீகரிக்கப்படவில்லை என்ற விடயத்தின் அடிப்படையில் மோதல்கள் துரதிர்ஷ்டவசமாக விரிவடைந்து சென்றாலும், இஸ்ரேலுக்கு மாத்திரமன்றி அதிகாரம் படைத்த இஸ்ரேல் சார்பு குழுக்களுக்கும்,அந்த சிந்தனை முகாமுக்கும் பலத்த அடியை ஹமாஸ் போராளிகளின் தாக்குதல் காண்பிப்பதாகவும், அம்முகாம் கண்ட பலத்த தோல்வியுமாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பலஸ்தீனில் அமைதி, நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவம் பேணப்பட வேண்டும் என்பதே தமதும் ஐக்கிய மக்கள் சக்தியினதும் நிலைப்பாடாகும் என்றும், நாங்கள் அமைதியை விரும்புகிறோம் என்பதுடன் பலஸ்தீனியர்களுக்கு அவர்களின் உரிமைகளை வழங்க வேண்டும் என்றும்,அவர்களின் தேசியம்,அரச நிருவாகம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும்,இது சர்வதேச அளவில் முன்மொழியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகும் என்றும்,பன்முக பார்வையில் பலஸ்தீன சுதந்திர தேசத்திற்கு சர்வதேசம் தற்போதேனும் ஒன்றுபடாவிட்டால் மனிதாபினம் தோல்வியட்டதாகவே அர்த்தப்படும் என்றும், மனிதாபின தோல்விக்கு இதை விட முன்னுதாரணம் வேறில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இலங்கை உங்களுடன் இருக்கின்றது என்பதை பலஸ்தீன மக்களுக்கு மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்துகிறேன் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் அவர்களும் கலந்து கொண்டிருந்தார். (அ)

## தேர்தலைப்...

இடத்திற்கு கொண்டு வருவதற்கான வழிவகைகள் இன்னும் வகுக்கப்படவில்லை. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் முதன்மை வாக்குறுதியாக இருந்த சர்வதேச நாணய நிதிய உடன்பாடு தொடர்பில் பல்வேறு சிக்கல் நிலைப்பாடுகள் உள்ளன.

வெளிநாட்டு கடன் வழங்குநர்களுடனான கடன் மறுசீரமைப்பு குறித்த கலந்துரையாடல் இன்னும் முடிவடையவில்லை.

இவ்வாறாக பின்புலத்தில் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையான தேர்தலை நடத்துவதை எக்காரணம் கொண்டும் பிற்போடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி அனுமதிக்காது.

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்திற்கும் எதிராக அனைத்து சக்திகளை ஒருங்கிணைத்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்.

உள்ளூராட்சித் மன்றத் தேர்தலையும், மாகாண சபைத் தேர்தலையும் நடத்தாமல் மக்களின் இறையாண்மை பறிக்கப்பட்டுள்ளது.

இது முற்றிலும் சட்டவிரோதமான செயல். 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குப் பிறகு ஜனாதிபதித் தேர்தல் கட்டாயம் நடத்தப்பட வேண்டும். தேர்தலை பிற்போட தற்போதைய அரசாங்கம் எடுக்கும் எந்த நடவடிக்கையும் கைகூடாது-என்றார். (அ)

## பிரான்ஸ்...

பாதிக்கப்பட்ட நிலையில் வட்டக்கச்சியில் உள்ள மனைவியை தொடர்பு கொண்டு தன்னால் நடக்க முடியாதுள்ளது என்றும் தன்னை யாரேனும் காப்பாற்றினால் அன்றி உயிர் தப்ப வேறு வழியில்லை என்றும் தெரிவித்தார் என உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

அதுவே அவர் இறுதியாக தொடர்பு கொண்டு பேசியது என்றும் உறவினர்கள் கூறினர். (அ)

## நிகழ்நிலை...

சுதந்திரம் உள்ளிட்ட சில அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாக உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் கடும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

நிகழ்நிலை காப்பு சட்டமூலம் கடந்த செப்ரெம்பர் 18ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுடன், கடந்த பாராளுமன்ற அமர்வில் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## நண்பிகள்...

வீட்டுச் சமையலறையில் தூக்கிட்டு உயிர்மாய்த்தனர்.

இவர்கள் இருவரும் இறுதியாக நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேறுக்காக காத்திருக்கும் மாணவிகள் ஆவர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார் சடலத்தை மீட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அத்தோடு இது தற்கொலையா கொலையா என்ற கோணத்தில் விசாரணைகளை மேற்கொண்டும் வருகின்றனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தலைச் சந்திக்கத் தயார்!

## சவால் விடுகிறது பொதுஜன பெரமுன

கொழும்பு, ஒக். 17

**தேர்தலைச் சந்திக்க எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அஞ்சமாட்டோம் எனவும், மிக விரைவில் தேர்தலை சந்தித்து கட்சியின் பலத்தை வெளிப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.**

நாட்டின் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுத்த தலைவர்கள் பொதுஜன பெரமுனவுடன் கைகோர்த்திருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அத்துடன் நாட்டின் பொதுச் சொத்துக்களை நாசம் செய்தவர்கள் பொதுஜன பெரமுனவை விமர்சனம் செய்யும் தரப்புடன் இணைந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலே பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் இந்த விடயத்தை தெரிவித்தார்.

மேலும், பொதுஜன பெரமுனவுக்கு எதிராக சமூக ஊடகங்களில் சேறுபூசும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், நாட்டின் அனைத்து அபிவிருத்திகளையும் முன்னெடுத்து வருவது எமது கட்சிதான் என்பதை வீதிக்கு இறங்கும் இளைஞர்களினால் உணர்ந்துகொள்ள முடியுமென அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், தேர்தலைச் சந்திக்க எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அஞ்சமாட்டோம் எனவும், மிக விரைவில் தேர்தலை சந்தித்து எமது கட்சியின் பலத்தினை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் கூறினார். (அ)

# மீண்டும் கியூ.ஆர் முறையா?




கொழும்பு, ஒக். 17

கியூ.ஆர் முறையை மீள அறிமுகப்படுத்துவது தொடர்பில் எவ்வித கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அத்தோடு எரிபொருளுக்கான எந்த ஒதுக்கீட்டு முறையையோ மீண்டும் அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானிக்கவில்லை என்றும் அவர் கூறினார். (அ)

# கடிதத்துக்கு மோடி பதில் அனுப்பாதமை ஏன்? சுமந்திரனே அதற்கு பதில் சொல்லவேண்டும்!

## விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 17

இந்திய பிரதமர் ஏன் இன்னும் குறித்த கடிதத்திற்குரிய பதிலை அனுப்பவில்லை என்ற கேள்விக்கும் சுமந்திரனே பதில் சொல்லவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அதன்படி, இந்திய பிரதமரிடம் கடிதம் சென்றடைந்தது என்பது சுமந்திரனுக்கு நன்றாக தெரிந்திருக்கும் எனில் அதற்கான பதிலையும் அவரே சொல்லவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், எனக்கு தெரிந்தவரையில் இந்திய பிரதமருக்கு தமிழ் கட்சிகள் அனுப்பிய கடிதமானது இன்னும்சென்றடையவில்லை என்று தகவல் கிடைத்தன.

இந்திய பிரதமரிடம் கடிதம் சென்றடைந்தது என்பதனை சுமந்திரனுக்கு நன்றாக தெரிந்திருக்கும் எனில் எதற்காக இந்திய பிரதமர் அந்த கடிதத்திற்குரிய பதிலை அனுப்பவில்லை என்ற கேள்விக்கும் சுமந்திரனே பதில் சொல்ல வேண்டும்.

சுமந்திரன் சொல்வதுபோல் கடிதம் இந்திய பிரதமரிடம் சென்றடைந்திருந்தால் அதற்குரிய பதில் கடிதத்தினை இந்தியப் பிரதமர் அனுப்பாததற்கு ஏதேனும் காரணம் ஒன்று இருக்க வேண்டும்.

அது ஒரு இடத்தில் தேங்கி நிற்பதாகவும் பிரதமரிடம் சென்றடையவில்லை எனவும் என்னிடம் கூறப்பட்டது.

இந்தியப் பிரதமருடைய காரியாலயத்திற்கு செல்லும் கடிதங்கள் யாவற்றிற்கும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் பதில் எழுதப்படும் எனக் கூறப்பட்டது.

அவ்வாறு இருக்கையில் பதில் வராததை வைத்துதான் இந்தியப் பிரதமருக்கு தமிழ்க் கட்சிகள் அனுப்பிய கடிதம் செல்லவில்லை என சொல்ல வேண்டி ஏற்பட்டது- என்றார். (அ)

## கிளிநொச்சியில் விபத்து;

# 2 பிள்ளைகளின் தந்தை மரணம்!

கிளிநொச்சி, ஒக்.

கிளிநொச்சி மாவட்டம் வேரவில் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளம் குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட வேரவில் பிரதான வீதியின் வேரவில் வைத்தியசாலைக்கு அண்மித்த பகுதியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7:30 மணியளவில் உழவு இயந்திரம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளம் குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் ஜெயாபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பூநகரி வலைப்பாட்டைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சிதம்பரநாதன் வர்மகுமார் (வயது-32) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (அ)

# மரக்கறி விலை குறைவடையும்

கொழும்பு, ஒக். 17

மரக்கறிகளின் விலைகள் குறைவடைந்துள்ளதாக பொருளாதார மத்திய நிலையங்களின் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் பெய்து வரும் மழை காரணமாக இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் பொருளாதார மத்திய நிலையங்களுக்கு கிடைக்கும் மரக்கறிகளின் தரமும் குறைவடைந்துள்ளதாக வர்த்தகர்கள் கூறினர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக ஏனைய பொருட்களைப் போன்று மரக்கறிகளின் விலைகளும் அதிகரித்தன.

உரப்பற்றாக்குறை மற்றும் ஏனைய கட்டணங்களில் ஏற்பட்ட மாற்றத்தினால் கடந்த காலங்களில் மரக்கறிகள் விலையில் பாரிய அதிகரிப்பு காணப்பட்டது.

இதன்படி, அனைத்து மரக்கறிகளும் 400 ரூபா முதல் ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

இந்த பின்னணியில் தேசிக்காய் கிலோ கிராம் ஒன்று 1000 ரூபா வரையிலும், பச்சை மிளகாய் 800 முதல் 1000 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்பட்டது.

இந்த நிலையில், மரக்கறிகளின் விலையை கட்டுப்படுத்தும் வகையில், மெனிங் சந்தை மற்றும் பொருளாதார மத்திய நிலையங்களின் விலைகளை ஒப்பிட்டு வேலைத் திட்டம் தயாரிக்கப்படவேண்டுமென நுகர்வோர் முன்னணி அண்மையில் வேண்டுகோள் விடுத்திருந்தது. (அ)

# சுகாதார செயலாளர் பதவிக்கு கடும் போட்டி

கொழும்பு, ஒக். 17

சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சிறீ சந்திர குப்த, அடுத்த மாதம் ஓய்வு பெறவுள்ளதால், சுகாதார செயலாளர் பதவிக்கு கடும் போட்டி உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்கவுக்கும் மேலதிக செயலாளர் லக்ஷ்மி சோமதுங்கவுக்கும் இடையில் இந்த போட்டி உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், சுகாதாரச் செயலாளர் ஜனக சிறீ சந்திரகுப்தாவும் இன்னும் ஒரு வருடம் அந்தப் பதவியில் நீடிக்க முயற்சிப்பதாகத் தெரியவருகிறது.

சுகாதார அமைச்சின் செயலாளர் பதவிக்கான வைத்தியர்களாக முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் , சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க, முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் பாலித மஹிபால ஆகியோரின் பெயர்கள் குழுவினால் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# தயாசிறி ஜயசேகர எம்.பிக்கு சிரேஷ்ட உபதலைவர் பதவி?

கொழும்பு, ஒக். 17

சுதந்திரக் கட்சியின் செயலாளர் நாயகம் பதவியில் இருந்து நீக்கப்பட்ட தயாசிறி ஜயசேகரவுக்கு சிரேஷ்ட உப தலைவர் பதவியை வழங்குவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் குழுவொன்றினால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்கள் 06 பேர் உள்ள நிலையில், தயாசிறி ஜயசேகர குறித்த பதவியினை பொறுப்பேற்றால் சிரேஷ்ட உப தலைவர்களின் எண்ணிக்கை 07 ஆக அதிகரிக்குமென குறிப்பிடப்பட்டுள்ளது.

தயாசிறி ஜயசேகர மீண்டும் கட்சியில் இணைந்துகொள்ளும் நிலையில் அவருக்கு கட்சியின் தலைவர், செயலாளர் அல்லது தேசிய அமைப்பாளர் ஆகிய பதவிகளை தவிர வேறு பதவி வழங்கப்படலாம் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னதாக தெரிவித்திருந்தார்.

இதன்படி, அவருக்கு சிரேஷ்ட உபதலைவர் பதவி வழங்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஆப்கானிடம் வீழ்ந்தது இங்கிலாந்து!



புதுடில்லி, ஒக். 17

நடப்பு உலகக் கிண்ணத் தொடரின் 13ஆவது போட்டியில் இங்கிலாந்து மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் விளையாடின.

புதுடில்லியில் நடைபெற்ற இந்தப் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி 69 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. உலகக் கிண்ண வரலாற்றில் ஆப்கான் பதிவு செய்துள்ள இரண்டாவது வெற்றி இது. கடந்த 2015இல் ஸ்கொட்லாந்து அணியை வீழ்த்தியிருந்தது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி பந்துவீச்சைத் தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 49.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 284 ஓட்டங்கள் எடுத்தது.

அந்த அணி சார்பில் ரஹ்மனுல்லா குர்பாஸ் 80 ஓட்டங்கள் எடுத்தார். ஆப்கான் அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் ரஹ்மனுல்லா குர்பாஸ் மற்றும் இப்ராஹிம் ஸத்ரான் இணைந்து 114 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். இக்ரம் அலிகில் 58 ரன்கள் எடுத்தார். இப்ராஹிம் ஸத்ரான் 28 ஓட்டங்கள், ரஷித் கான் 23 ஓட்டங்கள், முஜீப் உர் ரஹ்மான் 28 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

285 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இங்கிலாந்து அணி விரட்டியது. தொடக்கம் முதலே சீரான இடைவெளியில் இங்கிலாந்து அணி வீரர்கள் விக்கெட்டை இழந்தனர். அந்த அணி சார்பில் அதிகபட்சமாக ஹாரி புரூக் 66 ஓட்டங்கள் எடுத்திருந்தார். ஓவர்களுக்கு ஓட்டங்கள் எடுத்து இங்கிலாந்து அணி ஆட்டமிழந்தது. நடப்பு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் ஆப்கானிஸ்தான் அணி பதிவு செய்துள்ள முதல் வெற்றி இது. இங்கிலாந்து அணி இரண்டு போட்டிகளில் தோல்வியை தழுவியுள்ளது.

முஜீப் மற்றும் ரஷித் கான் தலா 3 விக்கெட்களை கைப்பற்றி இருந்தனர். மொஹம்மது நபி 2 விக்கெட் வீழ்த்தி இருந்தார். நவீன் மற்றும் பஸல்ஹக் ஃபரூக்கி தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். (ஐ)

# ரோஹித்தின் நீண்டதூர சிக்ஸரின் இரகசியம்!



அகமதாபாத், ஒக். 17

நீண்ட தூரத்துக்கு உங்களால் எப்படி சிக்ஸர் விளாச முடிகிறது என்று கிரிக்கெட் நடுவர் கேட்ட கேள்விக்கு இந்திய அணி அணித் ரோஹித் சர்மா சுவாரஸ்யமான பதில் அளித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இந்திய அணியின் ரோஹித் சர்மா 63 பந்துகளில் 86 ஓட்டங்கள் விளாசி அணிக்கு வெற்றி தேடிக் கொடுத்தார். போட்டியின் போது ரோஹித் ஒரு சிக்ஸரை விளாசினார்.

அதைப் பார்த்து வியந்த கள நடுவர் மராயிஸ் எராஸ்மஸ், ரோஹித் சர்மாவிடம் வந்து,

“உங்களால் எப்படி நீண்ட தூரத்துக்கு சிக்ஸரை விளாச முடிகிறது. பெரிய அளவில் சிக்ஸர்களை பறக்க விடுகிறீர்கள். இதில் உள்ள ரகசியம் என்ன... நீண்ட தூரம் சிக்ஸர் விளாசுவதற்கு உங்களின் துடுப்பில் ஏதோ சக்தி இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்” என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

இதற்கு ரோஹித் கூறும் போது, “அந்த இரகசியம் இதுதான். நீண்ட தூரம் சிக்ஸர் அடிப்பதற்கான சக்தி எனது துடுப்பில் இல்லை. எனது கைகளில்தான் உள்ளது” என்று நடுவரிடம் தனது கைகளின் வலிமையைக் காட்டினார். இதைப் பார்த்த ரசிகர்கள் ஆரவாரத்தில் துள்ளிக் குதித்தனர்.

# கோலி உத்வேகம் அளிக்கக்கூடியவர்

## ஆப்கான் வீரர் குர்பாஜ்



புதுடில்லி, ஒக். 17

உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் 13ஆவது போட்டியாக இங்கிலாந்து -ஆப்கானிஸ்தான் விளையாடியது.

சாம்பியன் அணியான இங்கிலாந்து பந்து வீச்சாளர்களை குர்பாஜ் துவம்சம் செய்தார். 57 பந்துகளில் 80 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதில் 8 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கும். 69 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தான் வெற்றி பெற்றது.

ரஹ்மானுல்லா குர்பாஜ், “விராட் கோலி உலகத்திலுள்ள அனைத்து இளம் வீரர்களுக்கும் உத்வேகம் அளிக்கக் கூடியவர். கிரிக்கெட் வீரர்கள் விராட் கோலியை பார்த்து அதிகம் கற்றுக் கொள்ளலாம். எப்படி ஒரு இன்னிங்ஸை தொடங்கி முடிக்க வேண்டும், எப்படி அதிகமான ஓட்டங்கள் குவிக்க முடியும் என்பதையும் விளையாட்டு குறித்து சரியான திட்டமிடலையும் அவரிடம் இருந்து நான் கற்றுக் கொண்டிருக்கிறேன்” எனக் கூறியுள்ளார். (ஐ)

# தசூன் சானக விலகல் இலங்கைக்கு பின்னடைவு

கொழும்பு, ஒக். 17

காயத்தால் அவதிப்படும் இலங்கை அணித் தலைவர் தசூன் சானக உலகக் கிண்ண போட்டியிலிருந்து விலகியுள்ளார். இதையடுத்து அந்த அணிக்கு குசல் மெண்டிஸ் அணித் தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் கடந்த 2 லீக் போட்டிகளில் இலங்கை அணியை வழிநடத்திய சகலதுறை வீரர் தசூன் சானக தொடைப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக எஞ்சிய போட்டிகளில் இருந்து விலகியுள்ளார்.

இதையடுத்து அணியில் அவருக்கு பதிலாக சாமிக கருணாரத்ன சேர்க்கப்பட்டுள்ளார். இதைத் தொடர்ந்து உலகக் கிண்ணத்தில் விளையாடும் இலங்கை அணியின் தலைவராக தற்போதைய உபதலவர் குசல் மெண்டிஸ் செயல்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் தொழில் நுட்பக் குழுவின் அனுமதியைப் பெற்ற பின்னரே அணித் தலைவராக குசல் மெண்டிஸ் நியமிக்கப் பட்டுள்ளார். முதல் 2 போட்டிகளில் இலங்கை தோல்வி கண்டுள்ள நிலையில், தசூன் சானகவின் விலகல் அந்த அணிக்கு பெரும் பின்னடைவாக அமைந்துள்ளது. (ஐ)



# ஒலிம்பிக் விளையாட்டில் கிரிக்கெட்டும் சேர்ப்பு!



லொஸ் ஏஞ்சல்ஸ், ஒக். 17

உலகின் விளையாட்டுத் திருவிழாவாக கருதப்படும் ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட்டை சேர்க்க வேண்டும் என்ற நீண்டநாள் கோரிக்கை தற்போது ஏற்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1896ஆம் ஆண்டு முதன்முதலாக கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கின. அடுத்த தொடரான 1900ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக்கில் மட்டும் கிரிக்கெட் போட்டி சேர்க்கப்பட்டு இருந்தது. அதன்பிறகு கிரிக்கெட் விளையாட்டு நீக்கப்பட்டது. ஆனால், கிரிக்கெட்டை மீண்டும் ஒலிம்பிக்கில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து கொண்டே இருந்தது.

அதன் விளைவாக, தற்போது கிரிக்கெட் விளையாட்டு மீண்டும் ஒலிம்பிக்கில் சேர்க்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2028ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற உள்ளது. இந்த ஒலிம்பிக் தொடரில் கிரிக்கெட்டை சேர்ப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டு இருந்தது. அந்தப் பரிந்துரை பட்டியலில் கிரிக்கெட் மட்டுமின்றி பிளக் கால்பந்து, ஸ்குவாஷ், பேஸ்போல், சொப்ட்போல் ஆகிய விளையாட்டுகளும் இருந்தன.

இந்நிலையில் கிரிக்கெட் உள்ளிட்ட 5 விளையாட்டுகளும் ஒலிம்பிக்கில் சேர்க்கப்படுவதாக லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் ஒருங்கிணைப்புக் குழு அறிவித்துள்ளது. (ஐ)

# இரண்டாம் உலகப்போர் உத்தியைப் பயன்படுத்தி இஸ்ரேலுக்குள் ஊடுருவிய ஹமாஸ் ஆயுதக்குழு

கடந்த வாரம் ஹமாஸ் ஆயுதக்குழுவைச் சேர்ந்தவர்கள் இஸ்ரேல் மீது கொடிய தாக்குதலை நடத்தியபோது, அந்நாட்டிற்குள் படையெடுத்து வந்த ஆயுதக்குழுவினர் பாராசூட் மூலமாகவும் நாட்டிற்குள் நுழைந்தார்கள்.

"இஸ் அல்-தின் அல்-கஸ்ஸம்-ப்ரிகேட்ஸ்" ஆயுதக்குழுவின் ராணுவப் பிரிவினர் ஒரு இசை விழாவிற்குச் சென்றவர்கள் மற்றும் காசா பகுதியைச் சுற்றியுள்ள இஸ்ரேலிய நகரங்கள் மீது தாக்குதல் நடத்தினர். இந்த திடீர் தாக்குதலை 'அல்-அக்ஸா தாக்குதல்' எனக் கூறினர்.

பாலத்தீன ஆயுதக்குழுவைச் சேர்ந்தவர்கள் பாராசூட் மூலமாகவும், கடல் மற்றும் நில வழியாகவும் ஊடுருவியதாக இஸ்ரேலிய ராணுவ செய்தித் தொடர்பாளர் ரிச்சர்ட் ஹெக்ட் உறுதிப்படுத்தினார்.

அல்-கஸ்ஸாம் ஆயுதக்குழவைச் சேர்ந்தவர்கள் பாராசூட் மூலமாகத் தரையிறங்குவது போன்ற படங்களும், வீடியோக்களும் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டன. இஸ்ரேல் மீதான தாக்குதலின்போது இதுபோன்ற நுட்பத்தைப் பயன்படுத்தியது இதுவே முதல்முறையாகக் கருதப்படுகிறது.



### வான் வழியாக எல்லையைக் கடந்த ஆயுதக்குழுவினர்

பாலத்தீன ஆயுக்குழுவைச் சேர்ந்தவர்கள் இஸ்ரேலையும் காசாவையும் பிரிக்கும் எல்லைப் பகுதியை பாராசூட்டில் அமர்ந்து கொண்டு வான்வழியாகக் கடந்துள்ளனர்.

ஜெனரேட்டர் மற்றும் பிளேடுகளால் இயக்கப்படும் அந்த பாராசூட், காசாவை சுற்றியுள்ள பகுதிக்கு முன்னேறும்போது இயக்கப்பட்டன.

எல்லையை ஊடுருவிச் செல்லும் நோக்கத்தில், ஹமாஸின் ராணுவப் பிரிவினர் வான்வழித் தாக்குதல் நடத்த ராணுவ பாராசூட்டுகளை தொடர்ச்சியாகப் பயன்படுத்தினர்.

இரண்டாம் உலகப் போரின் போதும் ஜெர்மனி மற்றும் அதன் நேச நாடுகள் பாராசூட் மூலம் தாக்குதல் நடத்தும் பிரிவினரைத்தான் முதலில் சண்டையிட அனுப்பினார்கள்.

### 1987இல் நடந்த கிளைடர் தாக்குதல்

கடந்த 7ம் திகதியன்று ஹமாஸ் ஆயுதக்குழு நடத்திய தாக்குதல், பாலத்தீன விடுதலைக்கான பாப்புலர் ஃப்ரண்ட் - ஜெனரல் கமாண்ட் அமைப்பைச் சேர்ந்த பாலத்தீனர்கள் இருவர், சிரியாவை சேர்ந்த ஒருவர் துனிசியாவை சேர்ந்த ஒருவர் ஆகியோரைக் கொண்ட குழுவால் நடத்



தப்பட்ட கிளைடர் ஆபரேஷனை நினைவுபடுத்துகிறது.

நவம்பர் 1987இல் இஸ்ரேலிய ராணுவ தளத்தைத் தாக்க அவர்கள் லெபனானில் இருந்து புறப்பட்டனர்.

### பாராசூட் மூலம் ஊடுருவிய ஹமாஸ் ஆயுதக்குழு

மோட்டார் பொருத்தப்பட்ட பாராசூட்களை பயன்படுத்தி, திசை திருப்புவதற்குப் பயன்படும் கட்டுப்பாட்டைக்கொண்டு, போர் விமானங்களைத் தரையிலிருந்து ஏவ முடிந்தது.

இதனால், அவர்கள் மலையில் ஏறாமல், விமானத்தில் இருந்து தரையிறங்காமல் பயணிக்கலாம். இந்த இஞ்சின் பொருத்தப்பட்ட பாராசூட்களை மணிக்கு 56கி.மீ. வேகத்தில் செலுத்த முடியும்.

பாராகிளைடர்கள் தரையிலிருந்து சராசரியாக 5,000 மீட்டர் உயரத்தில் மூன்று மணிநேரம் பறக்க முடியும். பாராகிளைடிங் இணையதளங்களில் உள்ள தகவலின் படி, இந்த பாராகிளைடர்களால் 230 கிலோ எடை வரை சுமக்க முடியும்.

இஸ் அல்-தின் அல்-கஸ்ஸம்-ப்ரிகேட்ஸ் ராணுவத்தின் ஊடகப் பிரிவினர் பகிர்ந்துள்ள வீடியோக்களில், அவர்கள் தரையிலிருந்து பாராகிளைடர்களை ஏவுவதைக் காட்டுகிறார்கள். ஒவ்வொன்றிலும் ஒன்று அல்லது இரண்டு பேரால் இயக்கப்படுகின்றன.

அவர்கள் வெளியிட்டுள்ள மற்ற காட்சிகள், ஆயுதக்குழுவைச் சேர்ந்தவர்கள் இஸ்ரேலிய தளங்களில் தரையிறங்கும் முன்பாகவே வானிலிருந்து துப்பாக்கிச் சூடு நடத்துவதைக் காட்டுகின்றன.

காசாவையும் இஸ்ரேலையும் பிரிக்கும் வேலியைத் தாண்டி பாராசூட் மூலம் ஊடுருவியவர்களை "சகர் படை" என அழைக்கின்றனர்.

### இஸ்ரேலிய ராணுவம் பாராசூட்களை ஏன் கண்டுபிடிக்கவில்லை?

ஹமாஸ் ஆயுதக்குழுவின் ஊடகப்பிரிவு சார்பில் வெளியிடப்பட்ட காணொளிக் காட்சியில், அவர்கள் காசாவில் இருந்து ராக்கெட்டுகளை ஏவி, அதன் மறைவில் ஆயுதமேந்திய பாராகிளைடர்கள் மூலம் அவர்கள் பறப்பதைக் காட்டுகிறது.

சில பாராகிளைடர்கள் குறைந்த உயரத்தில் பறப்பது போன்றும், மற்றவை உயரமாகப் பறப்பது போன்று இருந்தன. காசாவை சுற்றியுள்ள வான் பகுதியில் அவை மிகவும் தெளிவாகக் காணப்பட்டன.

இஸ்ரேல் ராணுவத்தால் ஏன் இந்தத் தாக்குதலைக் கண்டுபிடிக்க முடியவில்லை என இஸ்ரேல் ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

ஆயுதக்குழுவினர் வான்வழியாக ஊடுருவியதை இஸ்ரேலிய படைகளால் ஏன் கணிக்க முடியவில்லை என்பதற்கான காரணத்தை இஸ்ரேலிய ராணுவம் இன்னும் வெளிப்படையாகக் கூறவில்லை.

குறிப்பாக, பாராசூட்கள் மிகவும் கவனிக்கத்தக்க வகையில், மக்கள் தங்கள் தொலைபேசிகளில் படம் பிடிக்கும் வகையில் இருந்தபோதும், ராணுவத்தால் ஏன் கணிக்க முடியவில்லை என்ற கேள்வி எழுந்துள்ளது.

இஸ்ரேலியர்கள் நேரடியாக மனிதர்களை ரோந்துக்கு பயன்படுத்துவதை விட தொழில்நுட்பத்தை அதிகம் நம்பியிருந்தார்களோ?

"அயர்ன் டோம்" மற்றும் 'ரேடார்" போன்ற இஸ்ரேலிய வான் பாதுகாப்பு அமைப்புகள் பாராசூட் போன்ற சிறிய பறக்கும் பொருட்களைக் கணிக்கும் வகையில் வடிவமைக்கப்படவில்லை என சில செய்தி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.



ஹமாஸ் 5,000 ராக்கெட்டுகளை ஏவுவதன் மூலம் தனது திடீர் தாக்குதலை ஆரம்பித்தது என்று அல்-கஸ்ஸாம் ஆயுதக்குழுவின் தளபதி முஹம்மது அல்-டீஃப் முதல் நாளில் அறிவித்தார்.

ராக்கெட் ஏவுதலை திசைமாற்றப் பயன்படுத்தி, ஹமாஸ் ஆயுதக்குழுவைச் சேர்ந்தவர்கள் தரைவழியிலும், துப்பாக்கிப் படகுகளைப் பயன்படுத்தி கடல்வழியிலும், பாராசூட்டை பயன்படுத்தி வான்வழியிலும் ஊடுருவியுள்ளனர்.

ஊடக மற்றும் ராணுவ அறிக்கைகளின் படி, பாராசூட் தாக்குதல் மற்றும் அந்த பாராசூட்களால் வான் பாதுகாப்பு திறனை முறியடிக்கும் உத்தியே ஹமாஸ் ஆயுதக்குழுவினர் எல்லைக்குள் ஊடுருவுவதற்கு ஒரு தீர்க்கமான காரணியாக இருந்ததாகக் கூறுகிறார்கள்.

முதல் நாளில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் 100க்கும் மேற்பட்ட இஸ்ரேலிய குடிமக்கள் மற்றும் ராணுவ வீரர்களை கடத்திச் சென்றனர். தற்போது, "அவர்களைக் கொலை செய்துவிடுவோம்" என்று மிரட்டல் விடுத்தும் வருகின்றனர். ●

# இஸ்ரேல் - ஹமாஸ் போர் ராணுவ நடவடிக்கை தீர்வாகாது!

நீண்ட காலமாகத் தொடரும் இஸ்ரேல் - பாலஸ்தீன மோதல், அக்டோபர் 7 அன்று ஹமாஸ் அமைப்பு மேற்கொண்ட கடும் தாக்குதலின் மூலம் உச்சமடைந்திருக்கிறது. முற்றிலும் எதிர்பாராத இந்தத் தாக்குதலில், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். ஹமாஸின் கட்டுப்பாட்டில் உள்ள காசா மீது இஸ்ரேல் தொடுத்த பதில் தாக்குதலிலும் 700க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

பிரிட்டனின் காலனியாக பாலஸ்தீனம் இருந்ததிலிருந்து தொடங்கிய பிரச்சினை இது. பிரிட்டிஷ் அரசு பிரித்தாளும் சூழ்ச்சி, இதன் தொடக்கம் எனலாம். யூத, கிறிஸ்துவ, இஸ்லாம் மதங்களுடன் தொடர்புடைய ஜெருசலம் என்னும் புனித நகரை முன்வைத்து இந்தப் பிரச்சினை மையம் கொண்டது. பாலஸ்தீனப் பகுதிகளைச் சிறிது சிறிதாக ஆக்கிரமித்துக் கொண்ட இஸ்ரேலிய அரசு, மேற்குக் கரையில் தொடர்ந்து குடியிருப்புகளை ஏற்படுத்திவருகிறது.

அந்தப் பகுதியில் ராணுவத்தையும் குவித்துள்ளது. பாலஸ்தீனர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளிலும் தொடர்ந்து ஈடுபட்டுவருகிறது. பாலஸ்தீனர்கள் பலர் இஸ்ரேலியப் படைகளால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். படுகொலைகளும் நிகழ்ந்திருக்கின்றன. இதனால், இந்தப் பகுதி எப்போதும் பதற்றத்துக்கு உரிய பகுதியாக இருந்து வருகிறது.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கைகளால் ஹமாஸ் அமைப்பு கடும் அதிருப்தியில் இருந்தது. இதற்கிடையே, பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கொண்டுவந்த நீதித்துறைச் சீர்திருத்தத்துக்கு எதிராக, கடந்த பல மாதங்களாக இஸ்ரேல் மக்கள் போராடிவந்த நிலையில், உளவுப் பணிகளில் ஏற்பட்ட சுணக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு இந்தத் தாக்குதலை ஹமாஸ் அமைப்பு தொடுத்துள்ளது.

காசா எல்லையில் நடந்த இசை நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அப்பாவி மக்கள் மீது ஹமாஸ் படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். நூற்றுக்கணக்கானோரைக் கொன்றதுடன் பலரைப் பிணைக்கைதிகளாகவும் பிடித்துவைத்துள்ளனர். இந்தத் தாக்குதல்கள் பாலஸ்தீன மக்களின் இலக்கை அடையப் பயன்படாது எனக் கடும் கண்டனங்கள் எழுந்திருக்கின்றன. ஹமாஸ் அமைப்புக்கும், பெரும்பாலான சர்வதேச நாடுகளின் அங்கீகாரத்தைப் பெற்ற அதிபர் மஹ்மூத் அப்பாஸ் தலைமையிலான பாலஸ்தீன அரசுக்கும் இடையில் பல்வேறு வேறுபாடுகள் இருப்பதையும் கவனிக்க வேண்டும். அதேவேளையில், "இறையாண்மை கொண்ட சுதந்திர நாடு எனும் நிலையை பாலஸ்தீனம் அடையும் வரை இந்தத் தாக்குதலைக் கண்டிக்க முடியாது" என ஐரோப்பிய ஒன்றியத்துக்கான பாலஸ்தீனத் தூதரகத்தின் துணைத் தலைவர் ஹசன் அல்பலாவி கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஹமாஸ் அமைப்பு, தன் சொந்த மக்களின் நலன்களைப் பொருட்படுத்தாமல் மேற்கொண்ட இந்தத் தாக்குதல், பாலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வைத் தரப்போவதில்லை. பாலஸ்தீன ஆதரவு நிலைப்பாடு கொண்ட உலக நாடுகளின் ஆதரவை இழக்கவும் இந்தத் தாக்குதல்கள் ஒரு காரணமாகலாம். அதேபோல் அப்பாவி பாலஸ்தீனர்களைப் பொருட்படுத்தாமல் இஸ்ரேல் நடத்தும் கடுமையான பதிலடித் தாக்குதலும், காசா பகுதிக்கான மின்சாரம், குடிநீர் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை முடக்கியிருக்கும் நடவடிக்கையும் கண்டிக்கத் தக்கவை.

சமீபத்திய பதற்றம் தணிந்தாலும்கூட, மீண்டும் இம்மாதிரித் தாக்குதல்கள் தொடரும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. பாலஸ்தீன - இஸ்ரேல் பிரச்சினைக்கு ராணுவ நடவடிக்கைகள் பலன் தராது. காலம் காலமாகத் தொடரும் பாலஸ்தீன மக்களின் பிரச்சினைகளைப் பேசாமல், இதற்கு ஒரு உறுதியான தீர்வு கிடைக்காது. உண்மையில் இரு நாடுகளும் தங்கள் பகுதியில் அமைதி நிலவ விரும்பினால், ராணுவ நடவடிக்கைகளைக் கைவிட்டு, பிரச்னைகளுக்குத் தீர்வு காண விழைய வேண்டும். அதுவே முழுமையான தீர்வாக இருக்கும். ●

# தமிழ் விக்கிப்பீடியாவின் இருபதாண்டுகள்!




விக்கிப்பீடியா என்பது ஓர் கட்டற்ற இணையக் கலைக்களஞ்சியம். இந்த இணையக் கலைக்களஞ்சியம் இன்றைக்கு 322 மொழிகளில் கிடைக்கிறது.

இந்த இணைய கலைக்களஞ்சியத்தில் இந்திய மொழிகளில் ஒன்றான தமிழ் விக்கிப்பீடியா இரண்டாம் இடத்தில் உள்ளது. பெருமைக்குரிய தமிழ் விக்கிப்பீடியா கடந்த ஆண்டில் 1,50,000 தொகுப்புகளைச் சத்தமில்லாமல் கடந்தது என்றால், கடந்த செப்டம்பர் 30-ஆம் நாள் இரு தசாப்தங்களைக் கடந்துள்ளது. தமிழ் விக்கிப்பீடியாவின் இருபதாண்டு நிறைவுவிழா தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்றது.

கலைக்களஞ்சியம் (என்சைக்லோபீடியா) என்பது எழுத்து வடிவில் உள்ள அறிவுத்தொகுப்பு ஆகும். கலைக்களஞ்சியங்களின் முக்கியத்துவத்தினை உணர்ந்த, 18-ஆம் நூற்றாண்டில் பிரான்சிய மொழி கலைக்களஞ்சியத்தினை வெளியிட்ட டென்னிசு டிட்ரோ, "கலைக்களஞ்சியத்தின் நோக்கம், உலகம் முழுதும் பரந்துள்ள மனித அறிவைச் சேமித்து மக்களுக்குப் பயன்படுமாறு தொகுத்து, நமக்குப் பின்வரும் தலைமுறையினருக்கு வழங்குவது ஆகும்" என்று தெரிவிக்கின்றார்.

கலைக்களஞ்சியங்களின் தோற்றத்தை ஆராயும்போது இவை 18-ஆம் நூற்றாண்டின் அகரமுதலிகளிலிருந்து உருவானவை என்பதை அறியலாம். இக்கலைக்களஞ்சியங்கள், உள்ளடக்கம், எல்லை, ஒழுங்குபடுத்தும் முறை, உருவாக்கும் முறை என்ற நான்கு முக்கியக் கூறுகளை உள்ளடக்கியுள்ளன. கலைக்களஞ்சியங்கள் பொதுவானவையாகவோ (பிரித்தானிக்கா கலைக்களஞ்சியம் போல்), குறிப்பிட்ட துறை சார்ந்த கூறுகளை உள்ளடக்கியதாகவோ (மருத்துவக் கலைக்களஞ்சியம்போல்) அமையலாம்.

இதன் அமைப்பில் கொடுக்கப்படும் தகவல்களுக்கான நம்பிக்கைத் தன்மையினை அதிகரிக்கும் நோக்கில் மேற்கோள்களுடனும் எளிதில் தகவல்களைத் தேட அகர வரிசையிலும் அமைக்கப்பட்டன. காலப்போக்கில் ஏற்பட்ட தொழில்நுட்ப இணையப் புரட்சி காரணமாக இந்தக் கலைக்களஞ்சியங்கள் பல்லூடகங்களை உள்ளடக்கிய இணையக் கலைக்களஞ்சியங்களாகக் கிடைக்கின்றன (விக்கிப்பீடியா).

கலைக்களஞ்சியங்கள் வரலாற்றினை நோக்கும் போது கி.பி. 77-ஆம் ஆண்டில் உரோம அரசியலாளரான மூத்த பிளினியால் எழுதப்பட்ட இயற்கை வரலாறு என்று பொருள்படும் 'நேச்சுரலிஸ் ஹிஸ்டோரியா" என்னும் இலத்தீன் மொழி ஆக்கமே இன்று கிடைப்பவற்றுள் மிகவும் பழமையான கலைக்களஞ்சிய ஆக்கம் ஆகும். இக்காலகட்டத்தில் பல கலைக்களஞ்சியங்கள் தோன்றியிருந்தாலும் இன்றைக்குக் கிடைத்த நூல் இது ஒன்றே.

இடைக் காலத்தின் தொடக்கத்தில் செயின்ட் இசிடோர் என்பவர் 'எட்டிமோலோஜியே 630" என்னும் கலைக்களஞ்சியத்தினை வெளியிட்டார். பார்த்தொலோமியசு ஆங்கிலிக்கசு என்பவர் 1240-இல் ஆக்கிய கலைக்களஞ்சியமே இடைக்காலத்தின் நடுப்பகுதியில் அதிகமாக வாசிக்கப்பட்ட கலைக்களஞ்சியமாகும்.

எனினும் பிந்தைய இடைக் காலத்தில் 1260-ஆம் ஆண்டு அளவில் வின்செண்ட் என்பவர் 3 மில்லியன் சொற்களைக் கொண்ட கலைக்களஞ்சியத்தினைத் தொகுத்தார். இதனைத் தொடர்ந்து பாரசீகத்தில் முஸ்லிம்களால் தொகுக்கப்பட்ட கலைக்களஞ்சியமும், சீனாவில் 11,000 தொகுதிகளுடன் உலகின் மிகப்பெரிய கலைக்களஞ்சியங்களுள் ஒன்றும் உருவாக்கப்பட்டன.


அச்சுத் தொழிற்நுட்பம் பயன்பாட்டிற்கு வருவதற்கு முன்னர், இக்கலைக்களஞ்சியத் தொகுப்புகள் கைகளால் நகலெடுக்கப்பட்டவையாக அமைந்தன. எனவே, இதனை உருவாக்க ஆகும் பொருட்செலவு காரணமாக இக்கலைக்களஞ்சியம் பொதுப்பயன்பாட்டில் இல்லை. மறுமலர்ச்சிக் காலத்தின்போது, அச்சுக் கலை மேம்பாடடைந்ததன் காரணமாகக் கலைக்களஞ்சியம் பரந்த அளவில் பயன்படத் தொடங்கியது. அறிஞர்கள் பலர் தமக்கென நகல் ஒன்றினை வைத்திருக்க வாய்ப்பாக அமைந்தது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், கணினியில் பயன்படுத்தக் கூடிய 'சிடி-ரோம்" வகை கலைக்களஞ்சியங்கள் வெளியிடப்பட்டன. பின்னர் அவை 'டிவிடி" தட்டுகளாக மாறின. பொதுமக்களிடையே 2000 ஆண்டுகளின் நடுப்பகுதியில் இணையப் பயன்பாடு அதிகரித்ததன் காரணமாக இணையக் கலைக்களஞ்சியங்கள் தோன்றின.

இணையக் கலைக்களஞ்சியங்கள் இணையத்தின் மூலம் அணுகக்கூடிய எண்ம கலைக்களஞ்சியங்களாகும். விக்கிப்பீடியா, என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா மற்றும் என்சைக்ளோபீடியா டாட் காம் ஆகியவை இந்த வகையில் அடங்கும் இணையவழிக் கலைக்களஞ்சியங்களாகும். இவற்றில் விக்கிப்பீடியா கலைக்களஞ்சியமே காலத்தால் முதலில் தோன்றியதாகும்.

கட்டணமின்றி இணையக் கலைக்களஞ்சியப் பயன்பாடு குறித்த கருத்து 1993-இல் யூஸ்நெட்டில் இன்டர்பீடியா முன்மொழிவுடன் தொடங்கியது. இத்தகைய இணைய அடிப்படையிலான கலைக்களஞ்சியத்தில் எவரும் உள்ளடக்கத்தை சமர்ப்பிக்கலாம். இத்தகைய கலைக்களஞ்சியங்களைப் பயனர் எவரும் எவ்விதக் கட்டணமும் இல்லாமல் அணுகலாம்.

**கலைக்களஞ்சியங்கள் தமிழ் மொழியில் 20-ஆம் நூற்றாண்டு வரை தோன்றவில்லை. "அபிதானகோசம்", மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையினால் தொகுக்கப்பட்டு, யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு, 1902-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதுவே தமிழில் வெளியிடப்பட்ட முதல் கலைக்களஞ்சியம் ஆகும்.**




இந்த வரிசையின் ஆரம்ப திட்டமாக 'எவரிதிங் 2" மற்றும் "ஓபன் சைட" ஆகியவற்றைச் சொல்லலாம். 1999-இல், ரிச்சர்ட் ஸ்டால்மேன் குனூ என்பவர் இணையக் கலைக்களஞ்சியத்தை முன்மொழிந்தார். "நுபீடியா" என்ற இணைய கலைக்களஞ்சியச் செயல்பாட்டினைப் புரிந்துகொண்ட, விக்கிப்பீடியாத் திட்டங்களை முன்னின்று நடத்தும் விக்கிமீடியா அமைப்பின் நிறுவனரும், பிற விக்கி திட்டங்களை நடத்தும் அமெரிக்காவைச் சேர்ந்த ஜிம்மி வேல்சும் அமெரிக்க மெய்யியலாளரும், லாரன்சு மார்க் லாரி சாங்கரும் இணைந்து கட்டற்ற பன்மொழிக் கலைக்களஞ்சியமான விக்கிப்பீடியாவை ஆரம்பித்தனர். நியூபீடியா மற்றும் விக்கிப்பீடியா இணையத்தில் தோன்றும் வரை, நிலையான இலவச கலைக்களஞ்சிய திட்டத்தை இணையத்தில் நிறுவ முடியவில்லை.

2001-இல் விக்கிமீடியா அறக்கட்டளையால் தொடங்கப்பட்ட ஆங்கில விக்கிப்பீடியா, தற்பொழுது 67,00,000 கட்டுரைகளுடன் உலகின் மிகப்பெரிய கலைக்களஞ்சியமாக உள்ளது. விக்கிமீடியா அறக்கட்டளை 335 மொழிகளில் விக்கிப்பீடியா இணையக் கலைக்களஞ்சியங்களை உருவாக்கியுள்ளது. 322 மொழிகளில் இக்கலைக்களஞ்சியங்கள் செயல்பாட்டில் உள்ளன. இந்திய மொழிகள் பலவற்றிலும் இக்கலைக்களஞ்சியங்கள் உருவாக்கப்பட்டு தன்னார்வலர்களால் மேம்படுத்தப்பட்டுள்ளன.

பலவகைச் செய்திகளை, குறிப்பாக அறிவியல், தொழில்நுட்பம், சமூகம் தொடர்பான தகவல்களைத் தொகுத்துத் தரும் கலைக்களஞ்சியங்கள் தமிழ் மொழியில் 20-ஆம் நூற்றாண்டு வரை தோன்றவில்லை. "அபிதானகோசம்", மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையினால் தொகுக்கப்பட்டு, யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு, 1902-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதுவே தமிழில் வெளியிடப்பட்ட முதல் கலைக்களஞ்சியம் ஆகும்.

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடாக 1910-ஆம் ஆண்டு "அபிதான சிந்தாமணி" ஆ. சிங்காரவேலு முதலியாரின் கடின உழைப்பின் காரணமாக வெளிவந்தது. பெரியசாமித் தூரன் தலைமையில் 1954-இல் வெளிவந்த "தமிழ்க் கலைக்களஞ்சியம்" சிறந்த கலைக்களஞ்சியப் படைப்பாகும். இதன் பின்னர் 1980-களில் துறைசார் கலைக்களஞ்சியங்களை வெளியிடும் முயற்சியில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஈடுபட்டது. தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடான அறிவியல் கலைக்களஞ்சியமும் வாழ்வியற் களஞ்சியமும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

தமிழர்கள் இணையத்திலும் தமிழ் கலைக்களஞ்சியங்களை உருவாக்குவதில் ஆதிக்கம் செலுத்தினர். தமிழ் விக்கிப்பீடியா 2003-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ஆம் நாள் தொடங்கப்பட்டது. பெயர் தெரிவிக்கப்படாத பயனர் ஒருவரால் தமிழ் விக்கிப்பீடியாவின் முதற் பக்கத்தின் முதல் தொகுப்பு செப்டம்பர் 30-ஆம் நாள் நிகழ்ந்துள்ளது. இதன் பின்னர் முதல் கட்டுரை, கொலம்பசு 2003 திசம்பர் 3-இல் வெளியானது.

இதனைத் தொடர்ந்து இலங்கையைச் சேர்ந்த மயூரநாதன் வருகையினை அடுத்து தமிழ் விக்கிப்பீடியா குறிப்பிடத்தக்கப் பரிணாமத்தினை அடைந்தது. தொடக்கக்கால பயனர்களாக இலங்கைத் தமிழர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்களின் ஆதிக்கத்தினால் தமிழ் விக்கிப்பீடியாவின் பல்வேறு பிரிவுகளும் மொழிக் கலப்பின்றி தூயத் தமிழுடன் மிளிரத் தொடங்கின.

தாய்த் தமிழ்நாடு பயனர்கள் எண்ணிக்கை அதிகரித்த பொழுது கட்டுரைகளின் எண்ணிக்கையும் அதிகரித்தன. தன்னார்வலர்களால் தொகுக்கப்படும் தமிழ் விக்கிப்பீடியா இன்று 1,57,300 கட்டுரைகளுடன் இந்திய மொழிகளுள் இரண்டாவது இடத்தில் உள்ளது.

தமிழ் விக்கிப்பீடியா தொடங்கி 10 ஆண்டுகள் ஆன போது 56,000 கட்டுரைகளுடன் இருந்தது. இது 'ஒரு லட்சம் கட்டுரை" இலக்கினை மே 2008-இல் அடைந்தது. 2022 டிசம்பரில் 1,50,000 எனும் இலக்கினை எட்டிய தமிழ் விக்கிப்பீடியா கடந்த செப்டம்பர் 30-இல் இருபதாண்டினை நிறைவு செய்தது.

தமிழ் விக்கிப்பீடியாவின் முக்கியத் தொகுப்புகள் தமிழர் பண்பாடு, வரலாறு, அறிவியல், கணிதம், தொழில்நுட்பம், புவியியல், சமூகம் எனப் பல்வேறு பகுப்புகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன. முதன்மைப் பிரிவுகளில் உள்ள கட்டுரைகள், உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகைப்படுத்தலின் கீழ், நூற்றுக்கணக்கான கட்டுரைகள் இணைக்கப்பட்டுள்ளன.

விக்கியின் மென்பொருள் தொழில்நுட்பம் மிகவும் எளிமையாகவும், இலகுவாகவும் காணப்படுவதனால் தமிழ் விக்கிப்பீடியாவிலுள்ள கட்டுரைகளில் பயணிப்பது சுலபம். எந்தவொரு பிழையையும் சுட்டிக்காட்டித் திருத்திக் கொள்ளும் வசதியை இக்கலைக்களஞ்சியம் கொண்டுள்ளதால், இன்றைக்கும் உயிரோட்டமாக இக்கலைக்களஞ்சியம் விளங்குகிறது. ●